நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

PUTHIYA POOMI

පුදිය පූමි

சுற்று 07 மார்ச்/ஏப்ரல் 2000 பக்கம் 8 விலை 10/= சுழற்சி 34


## நம்பிக்கையில் சுழல்கிறது இவ்வுலகம்

ரஸவாதி செம்பைப் பொன்னாக்குகிறான்
குறளிவித்தைக் காரன் புளியங்கொட்டையில்
மாஞ்செடியை விளைவிக்கிறான்
காவிச்சட்டைக்காரன் காற்றிலிருந்து
திருநீற்றை வர வழைக்கிறான்
நம்பிக்கையில் சுழல்கிறது இவ்வுலகம்.

மந்திரவாதி சிறுவனைப் பிடித்த பேயை
வேப்பிலையால் விரட்டுகிறான்
உலக வங்கியின் ஆலோசனைகள்
வறுமையை விரட்டுகின்றன
கலாநிதி விக்கிரமபாகு ஜே.வி.பி.யின்
இனவாதத்தை விரட்டுகிறார்.
நம்பிக்கையில் சுழல்கிறது இவ்வுலகம்.

~ குறும்பன்.

# யுத்தத்தை தொடர்வதா சமாதானத்தை அடைவதா ?

நடந்து கொண்டிருக்கும் உள்நாட்டு யுத்தம் நாட்டையும் மக்களையும் நாளாந்தம் பெரும் நாசத்திற்குள் ஆழ்த்தி வருகின்றது. குறிப்பாக வடக்கு கிழக்கு மக்களை யுத்தத்தின் தீ நாக்குகள் சுட்டெரித்த வண்ணம் உள்ளன. உயிர் உடமை இழப்புகளுடன் இடம்பெயர்ந்து விபரிக்க முடியாத துன்பத்திற்குள் ஆழ்ந்துள்ளனர். இதன் மறு தாக்கம் தென்னிலங்கையில் பல்வேறு நிலைகளிலும் பிரதிபலிக்கின்றது. படைகளில் இருந்து கொல்லப் படுவோர் முதல் ஆங்காங்கே இடம்பெறும் தாக்குதல்களால் உயிர் இழப்புகள் படுகாயங்கள் ஏற்படுகின்றன. யுத்தத்தின் பாதிப்புகளை தமிழர்கள், முஸ்லீம்கள் மட்டுமன்றி சிங்கள மக்களும் அனுபவ ரீதியில் காணும் நிலை வளர்ந்துள்ளது. இதனாலேயே இக் கொடிய யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்னும் நிலை மேலோங்கியுள்ளது. சில மாதங்களுக்கு முன்பு கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள் மாணவர்கள் நடாத்திய ஆய்வு ஒன்றில் சிங்கள மக்கள் மத்தியில் 73 சதவீத மானவர்கள் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்பதை தெளிவாகக் கூறி உள்ளனர். தமிழ், முஸ்லீம், மலையக மக்களை பொறுத்தவரையில் யுத்தம் வேண்டாம், சமாதானம் வேண்டும் என்றே கோருகின்றனர். அண்மைய நாட்களில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மாவட்டங்களில் நடாத்தப்பட்ட சமாதானப் பேரணிகள் இதனை உறுதிப்படுத்தி உள்ளன.

அதேவேளை யுத்தம் வேண்டும் அது தொடரப்பட வேண்டும் என்போர் நாட்டில் இருக்கவே செய்கின்றனர். இவர்கள், பத்துவீதத்திற்கும் குறைவானவர்கள் பௌத்த சிங்களப் பேரினவாதிகள், ராணுவ யுத்த வெறியர்கள், அதிகார வெறியடித்த அரசியல் வாதிகள் சொத்து சுகம் தேடும் சுயநல சக்திகள் என்போரே இவர்கள். இவர்களுடன் வெளிநாட்டு ஆதிக்க சக்திகளும் ஆயுத வியாபாரிகளும் நாட்டைச் சூறையாட நிற்கும் மூலதனம் முதலிடுவோரும் யுத்தத்தை விரும்புவோருடன் கைகோர்த்து நிற்கின்றனர். இவர்கள் அனைவரும் மக்கள் விரோதிகள், தேச விரோதிகள். நாட்டையும் மக்களையும் நாசமாக்கி தமது சொத்துடமையையும் ஆதிக்கத்தையும் பாதுகாத்து நிற்க முற்படுபவர்கள்.



இத்தகைய சூழலிலே ஆட்சியில் உள்ள பொதுசன முன்னணிக்கும் அதன்தலைவியான சந்திரிக்காவிற்கும் ஒரு இக்கட்டான நிலை தோன்றி உள்ளது. அவர்களுக்கு மட்டுமன்றி பிரதான எதிர்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் கூட இரண்டில் ஒரு பதில் கூற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. யுத்தத்தை தொடர்வதா அன்றி சமாதானத்தைக் கொண்டு வருவதா? என்பதே அதுவாகும். பொதுசன முன்னணி முன்வைத்த சமாதானத்திற்கான யுத்தம் என்பது அர்த்தமற்றுப்போய் விட்டது. கடந்த ஐந்து வருட யுத்தத்தில் ஏற்பட்ட மோசமான யுத்தத் தோல்விகளால் சமாதானம் என்ற முழக்கம் வெறும் டமாரமாகிக் கொண்டது.

எனவே சமாதானம் வரவேண்டுமானால் பேச்சுவார்த்தையும் அரசியல் தீர்வும் தான் ஒரே பாதை என்பதையே நிலைமைகள் மீண்டும் மீண்டும் வற்புறுத்தி வருகின்றன. அதன். விளைவே நோர்வே நாட்டிடம் விடுக்கப்பட்ட அனுசரணைக் கோரிக்கையாகும்.

இக் கோரிக்கை நேர்மையானதாக இருப்பின் அதன் அடுத்த கட்ட வளர்ச்சிகள் விரைந்து முன்னெடுக்கப்படல் வேண்டும். அரசியல் தீர்வுக்கான யோசனைகள் பற்றி ஐக்கிய தேசிய கட்சியுடனும் தமிழ் கட்சிகளுடனும் அரசாங்கம் பேசி வருவதாகக் கூறப்படுவதில் அர்த்தமுள்ள அம்சங்கள் இருப்பதாக நம்ப முடியவில்லை. அவை பாராளுமன்ற தேர்தலுக்கான சில முன்னோடி நடவடிக்கைகளோ என்னும் ஐயுறவையும் கொள்ள வைத்துள்ளது. அத்துடன் ஐ.தே.கட்சியும் உளத் தூய்மையுடன் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்கிறதா அல்லது தருணம் பார்த்து காய் வெட்டி வெளியே வந்து கொள்ளுமா என்றும் எண்ணத் தோன்றுகின்றது. ஏனெனில் பொதுசன முன்னணியும்ஐக்கிய தேசியக் கட்சியும் அதிகாரத்தையும் பேரினவாதத்தையும் மையமாக வைத்தே செயல்பட்டு



வந்துள்ள கட்சிகளாகும்.

அதேவேளை வெளியே யுத்தத்தை தொடர வேண்டும் எனச் சிங்கள வீரவிதான, பயங்கரவாத எதிர்ப்பு தேசிய முன்னணி போன்ற தீவிர சிங்கள பௌத்த அமைப்புகள் வற்புறுத்தி வருகின்றன. அவை உள்ளார்ந்த தீவிர செயல்பாட்டையும் வளர்த்து வருகின்றன. விரைவில் ஆயுதம் தாங்கிய அடிப்படைவாத அமைப்புக்களாகி இன சுத்திகரிப்பில் இறங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. இவர்களது தீவிர நடவடிக்கைகளுக்கு பிரதான பேரினவாத கட்சிகள் மத்தியிலும் பெரும் வர்த்தகப்புள்ளிகள், சில புத்தி ஜீவிகளிடையேயும் ஆதரவு கிடைத்து வருகின்றது. அத்துடன் அயல் நாடுகள் சிலவற்றின் உதவி உட்பட வேறும் பல விடயங்களும் இருந்து

*8ம் பக்கம் பார்க்க.*

## மட்டுநகர் - பலாலி படைத்தள விஸ்த்தரிப்புக்கு காணிகள் பறிப்பு - வீடுகள் உடைப்பு !

மட்டுநகர் விமானப் படைத்தளம் பலாலி ராணுவத்தளம் ஆகியவற்றை விஸ்தரிக்கும் நோக்கிலான பிரச்சினை 1985ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சிக் காலத்திலிருந்தே இருந்து வரும் பிரச்சினையாகும். அரசாங்க வர்த்தமானி மூலம் இவ் இரு பிரதேசங்களிலும் உள்ள காணிகள் சுவீகரிக்கபட்டன. இதனால் மக்களின் காணிகள் வீடுகள் கோவில்கள் பாடசாலைகள் மட்டுமன்றி மயானங்களும் பறிக்கப்பட்டன. மட்டுநகரில் விமானப் படைத் தளத்திற்கு எடுத்த காணியில் இதுவரை சித்தி விநாயகர் ஆலயம் புதுநகர் விக்னேஸ்வரா வித்தியாலயம் என்பன மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்தன. அவ்வாறு ஆலையடிச் சோலை இந்து மயானமும் கத்தோலிக்க சேமக்காலையும் தகனத்திற்கும் அடக்கத்திற்கும் பயன் படுத்தப்பட்டு வந்தன. ஆனால் இப்போது இவற்றுக்கு படைத்தரப்பினர் தடைவிதித்துள்ளனர். தமது சொந்த மண்ணில் ஆலயம் செல்வதற்கும் பாடசாலை சென்று படிப்பபதற்கும் இறந்த பின் தகனம் அடக்கம் செய்வதற்கும் முடியாத நிலை என்றால் இதன் பெயர் சுதந்திரமா ? அல்லது' இயல்பு வாழ்க்கையா ? இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாத மட்டுநகர் மக்கள் வெகுண்டெழுந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இப்போது தற்காலிக இணக்கப்பாட்டிற்கு வந்து குறிப்பிட்ட நேரங்களில் முன் அனுமதி பெற்றே மேற் கூறிய கடமைகளை மக்கள், செய்ய வேண்டும் எனப் படையினரால் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

> **தமது சொந்த மண்ணில் ஆலயம் செல்வதற்கும் பாடசாலை சென்று படிப்பதற்கும் இறந்த பின் தகனம் அடக்கம் செய்வதற்கும் முடியாத நிலை என்றால் இதன் பெயர் சுதந்திரமா ?**

அவ்வாறு பலாலி படைத்தளத்தைச் சுற்றியுள்ள பலாலி வடக்கு, வசாவிளான் குரும்பசிட்டி, குப்பிளான் புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் உள்ள வீடுகள் ராணுவத்தால் தரைமட்டமாக்கப்பட்டு வருவதாக அறிய முடிகிறது. ஏற்கனவே அப் பகுதிகளில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் இதுவரை சொந்த இடம் திரும்பவில்லை. எஞ்சியுள்ள அவர்களது வீடுகளும் உடைத்து தரை மட்டமாக்கப் படுவதானது அப் பிரதேசம் முழுவதும் ராணுவப் படைத்தள விஸ்தரிப்பாகப் போகின்றது என்பதையே காட்டுகின்றது.

அரசாங்கம் தமிழ்க் கட்சிகளைத் தம்மோடு அரவணைத்து அவர்களைக் குளிர்ச்சிப் படுத்தி வைத்துக் கொண்டு தனது பேரினவாதப் படைத் தள விஸ்தரிப்பை செய்து வருகின்றது. கொழும்பில் சமாதானம் பற்றி முழக்கப் படுகிறது. மட்டக்களப்பிலும் யாழ்ப்பாணத்திலும் படைத்தள விஸ்தரிப்பு வேகமாக்கப்படுகிறது. இவற்றுக்கு எதிராக வெறுமனே பாராளுமன்றத் தமிழ் கட்சிகளை எதிர் பார்த்து நிற்காது மக்கள் எழுச்சிகள் மேன்மேலும் முன்னுக்கு வருவதே தேவையான நடவடிக்கையாகும்.

❖❖❖

## மலையக மக்களை ஏமாற்ற ஒரு புதிய பம்மாத்து முயற்சி

இ.தொ.கா. பாராளுமன்ற உறுப்பினர் பி.பி. தேவராஜ் தலைமையிலான குழு மலையகத் தமிழ் மக்களின் உண்மையான அபிலாஷைகளை பிரதிபலிக்குமா அல்லது உண்மையான அபிலாஷைகளை பிரதிபலிக்காமல் தடுப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளதா ? அக்குழுவில் முழு மலையகத்தையும் பிரதிநிதித்துவம் செய்யும் பல்துறைசார்ந்தவர்கள் இடம் பெறாததால் மேற்படி சந்தேகங்கள் எழுகின்றன.

மலையகத் தமிழ் மக்களின் இனத்துவ உரிமைகள், சுயாட்சி உரிமைகள், பாராளுமன்ற பிரதிநிதித்துவம் மொழியுரிமை என்பவற்றை உரியமுறையில் பொது உடன்பாட்டுடன் மலையகத் தமிழ் மக்களின் சார்பில் முன்வைப்பதற்கான முயற்சிகள் சில ஏற்கனவே மேற்கொள்ளப் பட்டுள்ளன. முன்வைக்கப்படும் யோசனைகள் தனியொரு கட்சியினது அல்லது குழுவினதோ என்ற நிலைமையை விட பரந்தளவில் ஏறக்குறைய எல்லா தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள், அமைப்புகளின் ஒத்துழைப்புடன் முன்வைக்கப்பட வேண்டும் என்ற ரீதியில் கலந்துரையாடல்களை மேற்கொள்ள சில பிரமுகர்கள் முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.

ஆனால் மலையகத்தமிழ் மக்களின் சார்பில் உத்தேச அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்காக சிபாரிசுகளை அல்லது யோசனைகளை சமர்ப்பிக்கவென இ.தொ.கா. எம்.பி. பி.பி. தேவராஜ் தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இதில் ம.ம.மு. தலைவரும் எம்பியுமான பெ. சந்திரசேகரம் மேல்மாகாணசபை உறுப்பினர் மனோ கணேசன் போன்றோரும் இடம்பெறுகின்றனர். அக்குழுவை அமைப்பதற்கான ஏற்பாட்டை கண்டியில் இருக்கும் பெ. முத்துலிங்கம் தலைமையிலான சமூக அபிவிருத்தி நிலையம் செய்திருந்ததாகத் தெரிகிறது.

அக்குழுவை நியமிப்பதற்கான கூட்டம் கொழும்பு சுகததாஸ ஸ்போர்ட்ஸ் ஹோட்டலில் நடத்தப்பட்ட விதத்தை பார்க்கின்றபோது முழு மலையகத்தமிழ் மக்களையும் பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய பலதரப்பினரும் அழைக்கப் பட்டிருக்கவில்லை. அழைப்பிதழ்கள் அனுப்பி வைக்கப்படும் எனக் கூறப்பட்டபோதும் பலருக்கும் அழைப்பிதழ்கள் அனுப்பி வைக்கப்பட வில்லை. அதன் மூலம் பல்துறை சம்பந்தப்பட்டவர்களின் பங்களிப்பு தவிர்க்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு சீர் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் காலகட்டங்கள் அரசியல் வரலாற்றில் முக்கிய காலகட்டங்களாக கொள்ளப்பட்டுள்ளன. தற்போது இனப்பிரச்சினையின் தீர்வை முதன்மைப்படுத்தி இலங்கையின் அரசியல் அமைப்பில் திருத்தங்கள் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. இவ் வேளையில் மலையகத் தமிழ் மக்கள் சார்பில் எடுக்கபட்ட முயற்சிகள் என்பது வரலாறு பூராவுமே கேட்கப்பட வேண்டிய கேள்வியாக இருக்கும். அக்கேள்வியிலிருந்து தப்புவதற்கான ஏதாவது ஒன்றை செய்துவிட்டோம் என்று காட்டுவதற்காக சில முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம். அரசாங்கத்தின் விருப்புக்கு மேல்

*8ம் பக்கம் பார்க்க*

நன்றி - நூலகத்திட்டம்



# சந்திரசேகரன் உரத்துப் பேசுகிறார் ஏன்?

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அதன் ஒரே பாராளுமன்ற உறுப்பினருமான பெ. சந்திரசேகரன் அண்மைய காலத்தில் மக்கள் பிரச்சினை பற்றி மிகவும் உரத்துப் பேசி வருகிறார். ஐந்து வருடங்களாக மிகவும் கவனமாக நா காத்து பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு கை உயர்த்தி பாதுகாத்து வந்தவர் தான் இந்த சந்திரசேகரன். அதோ வீடுகள் இதோ குடிமனைகள் எனக் கணக்குக் காட்டி பத்து ஆண்டுகளுக்கு இடையில் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் புதிய வசதிமிக்க வீடுகளில் குடிபுகுந்து கொள்வார்கள் எனக் கூறி வந்தவர் இந்த சந்திரசேகரன். ஐந்து வருடமாக ஆட்சிக்கு வக்காலத்து வாங்கிப் பேசி வந்தமைக்கு காரணம் அவர் வகித்த பிரதி அமைச்சர் பதவி தான். இந்த அரை அமைச்சர் பதவியால் சீரும் சிறப்பும் பெற்றவர் அவர் மட்டுமல்ல அவருடன் நெருங்கி நின்ற பரிவாரங்களும் ஆகும். வாகனத் தொடர்களும் வங்கிக் கணக்குகளும் அண்ணன் வருகிறார் என்ற ஆரவாரங்களும் மாலை மரியாதைகளும் பழங்கதையாகிப் போனதில் பலருக்கு வருத்தம் தான். பதவியைத் தூக்கி வீசியது மலையக மக்களுக்காக அல்ல, தோட்டத் தொழிலாளர்களின் சுய மரியாதை காப்பதற்கு இல்லை. பொது சன முன்னணியில் பிடித்த கொப்பை விட யூ. என். பியில் பெரிய கொப்பை பிடிப்பதற்காகவேயாகும். என்ன செய்வது கணக்கு தப்புக் கணக்காகி விட்டதே. எசமான் ரணில் ஜனாதிபதி விடுவார் என்று நம்பியே 'பதவியைத் தியாகம் செய்தார் சந்திரசேகரன். ஆனால் இன்று அதுவும் இல்லை இதுவும் இல்லை என்றாகி விடுமோ என்று அஞ்ச வேண்டியதாயிற்று. என்றாலும் அடுத்த பாராளுமன்றத்திற்கு எப்படியாவது திரும்பி வந்துவிடவேண்டும் என்பதில் மிகக்கவனமாக இருக்கிறார். அதன் காரணமாகவே தடல்புடல் பேச்சுக்கள் நிகழ்த்தி வருகிறார் சந்திரசேகரன். இவரது ஒரு வாக்கை வைத்து ஆட்சியமைத்து அதன் மூலம் பலவாக்குகளை அதிகரித்துக் கொண்டவர் சந்திரிகா அம்மையார். மலையகத்தின் பத்து பா.உ.க்களையும் அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவாகக் கை உயர்த்த வைத்த பெருமை அம்மையாருக்கு உண்டு. சந்திரசேகரன் முழு அமைச்சர் கேட்டபோது, முடியாது போனால் போ எனக் கூறி சந்திரசேகரனைக் கை விட்டு மிகுதி ஒன்பது இ.தொ.கா. கரங்களையும் மாதாமாதம் உயர்த்த வைத்து வருபவரும் சந்திரிகா அம்மையாராகும்.

> இந்த சந்திரசேகரன் ஐந்து வருடமாக ஆட்சிக்கு வக்காலத்து வாங்கிப் பேசி வந்தமைக்கு காரணம் அவர் வகித்த பிரதி அமைச்சர் பதவி தான்.

பாவம் சந்திரசேகரன் இப்போது மலையக மக்களுக்காக உரத்துப் பேசிவருவதை மலையக மக்கள் நக்கல் சிரிப்புடன்தான் பார்க்கிறார்கள். இனிமேல் தானாம் தனது தனித்துவத்தை மலையக மக்கள் முன்னணி காட்டப் போகிறது. எப்படி என்பதைத்தான் நாங்கள் பார்க்க காத்து இருக்கிறோம். மலையக மக்கள் ஏமாந்து கொள்வார்களேயானால் சந்திரசேகரன் போன்றோர் வெல்வார்கள். ஏமாறத் தயாராக இல்லாது விட்டால் இத்தகையவர்கள் தோற்றுப் போவார்கள் என்பதுதான் உண்மை.

***மாரிமுத்து மகேஸ்வரன்***
பொகவந்தலாவை.

# மானிப்பாய் மத்திய மருந்தகத்தை ஒதுக்குப் புறத்திற்கு மாற்ற வேண்டாம்

வடபகுதியில் அபிவிருத்தி என்பது ஆமைவேகத்தில் என்பதே பொதுவான கருத்து. இருப்பினும் இடம் பெறும் அபிவிருத்திகளில் சுயநலமிகளும் ஆதிக்க சக்திகளும் உட்புகுந்து தத்தமது கைவரிசைகளைக் காட்டி வருவது கவனத்திற்குரியதாகும். மானிப்பாய் மத்திய மருந்தகம் மகப்பேற்று மனை கடந்த 65 ஆண்டுகளாக அப்பிரதேச மக்களுக்கு இலவச சிகிச்சை அளித்துவரும் அரசினர் மருந்தகமாகும். மானிப்பாய் பிரதேசத்தின் சகல மக்களும் குறிப்பாக அன்றாட உழைப்பாளர்களான தொழிலாளர்கள், விவசாயிகள், சிறு தொழில் புரிவோர் குறைந்த வருமானமுடைய அரசாங்க உத்தியோகத்தர்கள் என்போர் அதன் பயனைப் பெற்று வருகின்றனர். இதற்கு அடிப்படைக் காரணம் மேற்படி மருந்தகம் மாணிப்பாய் பிரதேசத்தில் எண்பது வீதமான மக்கள் வாழும் வாழ் இடங்களுக்கு மத்தியில் அமைந்திருப்பதே ஆகும்.

ஆனால் இப்போது அம் மருந்தகத்தை கிராமிய வைத்தியசாலையாகத் தரமுயர்த்தி சொந்தக் கட்டிடத்தில் இயங்க வைக்க அரசாங்கம் நிதி அளித்துள்ளது. அதற்காக காணி வாங்கும் முயற்சியும் இடம் பெற்றது. இச் சந்தர்ப்பத்தை வழமைப்போல் சில சுயநல சக்திகளும் ஆதிக்க மனப்பான்மை படைத்தவர்களும் சேர்ந்து மானிப்பாயின் வட பகுதி ஓரத்தில் திப்பலி மயானத்திற்கு அருகாமையில் சன சஞ்சாரமற்ற ஒரு இடத்தில் காணி வாங்கி அதில் வைத்தியசாலை கட்ட முயன்று வருகின்றனர். இதனை மானிப்பாய் நவாலி, ஆனைக்கோட்டை, முள்ளி, உயரப்புலம், சாவற்காடு, சுதுமலை பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தத்தமது பொது அமைப்புகள் மூலம் கடுமையாக எதிர்த்து மத்திய பகுதியில் தான் வைத்தியசாலை கட்டப்படவேண்டும் என வற்புறுத்தி வருகின்றனர். அதற்கு வசதியாக இம் மருத்தக நலன்புரிச் சங்கம் மக்களது திரட்டிய பணத்தில் நவாலி - ஆனைக்கோட்டை வீதியில் நாலு லட்சம் ரூபாயில் காணியும் பெற்றுக்கொடுத்தது. இக் காணியில் வைத்தியசாலை அமைக்கப்பட்டால் பிரதேசத்தின் சகல பகுதி மக்களுக்கும் வசதியாக இருக்கும் என்பதே மக்களது கருத்தாகும். ஆனால் எப்படியும் இவ் வைத்தியசாலையை ஒதுக்குப்புறமான திப்பிலி மயானத்திற்கு அருகாமைக்கு கொண்டு செல்ல சில சுயநல சக்திகள் தமது செல்வாக்கை பிரயோகித்து வருகின்றன. இதற்கு பிரதேச சுகாதார உயர் அதிகாரிகள் உடந்தையாக இருந்து சவால் விட்டு மயானப் பக்கம் கொண்டு செல்ல முயற்சி செய்கிறார்கள். மக்களுக்கு வசதியாக மருந்தகம் இருப்பதில்லை. அது எங்கு போனாலும் மக்கள் தேவையானால் தேடிப்போக வேண்டியது தான் எனத் திமிர்ப் பேச்சுப் பேசுகிறார்கள். இந்த மருத்தகத்தை இடம் மாற்ற வேண்டாம் என இப் பிரதேசத்தின் சகல மக்களும் ஒரே குரலில் எதிர்ப்புக் தெரிவித்து வருகின்றனர். ஆனால் பணம் செல்வாக்கு, சாதி அந்தஸ்து, அதிகாரம் போன்ற வற்றைப் பாவிக்கும் சில சுய நலமிகளும் அவர்களுக்கு துணை போகும் பிரதேச சுகாதார அதிகாரிகளும் மக்களுக்கு எதிராக செயல்பட்டு வருகின்றனர். இவ்விடயம் சம்மந்தமாக மாகாண சுகாதாரத் திணைக்களமும் உரிய உயர் அதிகாரிகளும் மக்களது கோரிக்கைக்கு செவிமடுத்து அவர்களது நியாயமான எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டும். இல்லாதுவிடின் மக்கள் தமது எதிர்ப்பு இயக்கத்தை செயலில் காட்டவேண்டிய சந்தர்ப்பமே ஏற்படும்.

***சி. சிவசங்கரநாதன்.***
மானிப்பாய்.

# பேராசிரியர் எஸ். ரி. ஹெட்டிகே கூறுகிறார்

நாட்டின் இனப்பிரச்சினை ஒரு பெரும் சவாலாகும். அது உயிர்களைப் பலிகொண்டதுடன் வளங்களையும் இரு பகுதி இளைஞர்களையும் நாசமாக்கியுள்ளது. நாட்டின் எதிர்காலம் இப் பிரச்சினையின் தீர்விலேயே தங்கியுள்ளது. அதிகாரப் பகிர்வு என்பது, தீர்வின் ஒரு பகுதி மட்டுமே அதிகாரம் பகிர்ந்து அளிக்கப்படாமையினால் மட்டும் இனப் பிரச்சினை தோன்றவில்லை. அதற்கு பல்வேறு காரணிகள் ஊட்டமளித்தன. மையப்படுத்தப்பட்ட அதிகாரம், சக்தி, தாமானம் எடுக்கும் முறைமை போன்றவற்றை சுயாட்சி மூலம் பிரதேச ஆட்சி மன்றங்களுக்கு மாற்ற வேண்டும். அதிகாரத்தைப் பகிர்வது பாகுபாடு காட்டும் போக்கை ஒழிப்பது, ஒதுக்கல் ஓரங்கட்டுதல் போன்றவற்றை நீக்கும் வகையில் பன்முகப்படுத்தல் செய்யப்படல் வேண்டும்.

நாடு எதிர்நோக்கும் அடுத்த பிரச்சினை செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்குமிடையில் இடைவெளி தொடர்ந்தும் விரிவடைந்து செல்வதாகும். இதனால் பெரும் பாலான மக்கள் உயிர் வாழ்வதற்குப் போராடிக் கொண்டிருக்கின்றனர். வளங்கள் சமமற்றவகையில் பகிரப்படுவதால் பிரச்சினைகள் தீர்க்கப்படாதுள்ளன. வறுமையைக் குறைக்கும் திட்டங்களால் சமூகப் பாதுகாப்பு வழங்க முடியாது.

1977க்கு முன் பொருளாதாரம் பெருந் தோட்டத்தையும் விவசாயத்தையும் முன்னிலைப்படுத்தி இருந்தது. ஆனால் திறந்த பொருளாதாரம் என்பது இருவகைப் பொருளாதாரமாகியது. விவசாயப் பொருளாதாரம் படித்த இளைஞர்களுக்கு கவர்ச்சியற்றதாகிக் கொண்டது. உத்தியோக மோகம் திறந்த பொருளாதாரத்தால் ஏற்பட்டுள்ளது. தனியார் கம்பனிகளும் அரசசார்பற்ற நிறுவனங்களும் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன. ஆங்கிலப் பாவனை அத்தியாவசியமாகி வருகின்றன. அதே வேளை பெண் தொழிலாளர் பட்டியல் கூடிச் செல்கிறது. இவை அனைத்தும் கவனத்திற்கு கொள்ள வேண்டியவை எனப் பேராசிரியர் எஸ். ரி. ஹெட்டிகே கூறுகிறார்.

# நாலு நடக்கும் உலகிலே

## சகுனியும் தோற்று விடுவான்

தேர்தலுக்குமுன் தேசிய இனப்பிரச்சனையைத் தீர்க்க விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும் எனவும் இன்னும் என்னென்னவோவும் சொன்ன யூ.என்.பி. தலைமை இப்போது வேறொரு நாடகம் ஆடுகிறது. தேசிய இனப்பிரச்சனைக்கான 'தீர்வுப் பொதி' பற்றி அரசுடன் பேசத் தயக்கம் காட்டிய யூ.என்.பி. தலைமை இப்போது இணக்கம் தெரிவித்துள்ளது. காக்கை உட்காரப் பனம்பழம் விழுவதுபோல, அதே சமயத்தில் பௌத்த மஹா சங்கங்கள் உட்பட்ட சிங்கள பௌத்தப் பேரினவாத அமைப்புக்கள் தீர்வுக்கு எதிராக குரல் எழுப்பியுள்ளார்கள். சிங்கள மக்களை எவ்வகையிலும் பிரதிநிதித்துவ படுத்தாத இந்தக் குழுக்களின் குரலுக்கு ஆளுங்கட்சியும் யூ.என்.பியும் என்றும் செவிசாய்க்கத் தவறுவதில்லை. ஏனெனில் அது அவர்கட்கு அவசியமான ஒரு தப்பி ஓடும் வழியாகவே இருந்து வந்துள்ளது.

இன்று இந்தியத்தலையீடின்றித் தேசிய இனப்பிரச்சனையைத் தீர்ப்பதை எதிர்ப்போரின் பட்டியல் விநோதமானது. இந்தியாவின் கைக்கூலிகளாக இன்னமும் இயங்குகிற முன்னால் விடுதலை அமைப்புக்கள் மட்டுமல்லாது சிங்கள பௌத்த வெறியர்களின் முகாமான வீரவிதானவும் அந்தப் பட்டியலில் அடக்கம். இந்த இன ஒழிப்புப் போர் என்ற சதுரங்கப்பலகையில் யார்யார் காய்களை நகர்த்துகிறார்கள் என்பது அம்பட்டமாகவே தெரியத் தொடங்கியுள்ளது. இந்திய மேலாதிக்கமும் சிங்களப் பேரினவாதமும் இன்று ஒரே தரப்பில் நிற்பது பற்றிய சந்தேகங்கள் மேலும் உறுதியாகிவிடுகின்றன.

பாரதிய ஜனதா பற்றி எமது நாளேடுகள் தமிழரிடயே ஊட்டி வளர்த்த மாயை இனிமேல் மெல்ல மெல்ல குலையும். அதற்குள் எத்தனை ஏமாற்றமும், குழப்பமும் அழிவும் ஏற்பட வேண்டுமோ? எங்கள் முதலாளிய ஏடுகளும் சுயலாப அரசியற் குழுக்களும் தங்களது குறுகிய நலன்கட்காக தமிழ் மக்களை ஏமாற்றுவதை நாம் மக்களிடம் தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டாமா?

பாரதப் போரின் அழிவுகட்கு முக்கியமான காரணம் சகுனியின் வஞ்சனை. பாரத அதிகார வர்க்கம் தென்னாசிய அரசியலின் துரியோதனாகவும் சகுனியாகவும் அவதாரம் எடுத்துள்ளது என்பதை நமது மக்கள் மறுபடியும் நினைவு கூரும் வேளை இது.

## நீலனுக்கு வெள்ளையடிப்பது

சமகால அரசியலில் தமிழ் மக்களால் ஏற்கப்படாத இரண்டு முக்கிய அரசியல் சூதாடிகளைச் குறிப்பிடுவதாயின் இவருடைய பேரும் கதிர்காமருடைய பேருமே பலரது மனதுக்கு வரும்.

நீலனை ஒரு 'மகாத்மா காந்தி' போல ஒரு தார்மிக வழியாக கௌடில்யன் போன்ற ஒரு சாணக்கியனாக ஈழத் தமிழரின் ஈடினையற்ற அறிஞனாக இன்னும் என்னென்னவோ ஆகக் கட்டி எழுப்புகிற முயற்சிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைவரான பில்கிளின்ற்றனும் கிளின்ற்றனுடைய தூண்டுதலின் பேரில் கோ.ஃபி அனான் என்கிற ஐ.நா. சபைத் தலைமையில் உள்ள எடுபிடியும் எத்தனையோ அனுதாபச் செய்திகளையும் புகழாரங்களையும் சூட்டியும் ஈழத்துத் தமிழர் நடுவே எதுவுமே எடுபடவில்லை.

அரசாங்கமும் நீலனுக்கு நெருக்கமான என்.ஜி.ஓ. பிரமுகர்கள் சிலரும் இந்தியாவில் நீலனுக்கு நெருக்கமானவர்களும் கடந்த பெப்ரவரி மாதம் சேர்ந்து நடத்திய 'திருவிழாவும்' எடுபடவில்லை. ஆனாலும் அவர்கள் சோர்வார்களா ?

ஹிந்து ராமின் இளஞ்சிவப்பு ஏடான ஃபுறொன்ட்லைனில் நீலன் பற்றிய புகழாரங்கள் தொடர்கின்றன. நீலனுடைய அரசியல் தரகு வேலைகள் எல்லாம் வசதியானவை மறக்கவும் மறைக்கவும் படுகின்றன. மூன்று வருடங்கள் நீலன் சம்பந்தனின் கையொப்பத்தைப் போலி செய்து அகப்பட்டது கூட இன்று மறக்கப்பட்ட விஷயம். நீலனுடைய கொலை கண்டிக்கத்தக்கது என்பதில் மிகப் பெரும்பாலான தமிழர்கள் உடன் படுவார்கள். ஆயினும் நீலனுடைய இழப்பு அவர்களுடைய இழப்பல்ல எனவும் அவர்கள் அறிவார்கள்.

குமார் பொன்னம்பலத்துக்காக இந்த மண்ணின் ஒவ்வொரு தமிழ் நெஞ்சும் அழுது கதறியது பற்றி ஃபுறொண்ட்லைன் அறியும். குமார் பொன்னம்பலம் பற்றி அதற்கு அக்கறை இல்லை. ஏன்? ஏனென்றால் இந்திய எசமானத்துவத்தின் இடத் தோளான ஃபுறொண்ட் லைனுக்கு ஈழத் தமிழ் பற்றி ஏது அக்கறை !

## சமாதானத்தைப் பேணும் வழி

மார்ச் மாதம் 7ம் திகதி மாலை ரூபவாஹினியில் சிங்களத்தில் ஒரு கலந்துரையாடல். பெண் அமைச்சர் ஒருவர் சமாதானத்திற்கான முயற்சிகள் பற்றி விரிவாக பேசினார். முன்னாள் பிரதமர் சிரிமாவோ பண்டாரநாயக்க சீன - இந்தியப் போரை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்த வழி ஏற்படுத்தினாரென்றும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாகிஸ்தான் - இந்தியா மோதலின் போது சமாதானத்திற்கு வழி ஏற்படுத்தினாரென்றும் சொன்னார். அதனால் பெண் அரசிய தலைவர்கள் சமாதானத்திற்கு வழி வகுக்க வல்லவர்கள் என்றும் உலக சமாதானத்தை நிலைநாட்டிய பெண் தலைவர் உள்நாட்டுப்போரிலும் சமாதானத்தை ஏற்படுத்த வல்லவர் என்றார்.

கலந்துரையாடலை நடத்தியவர், தலைவர்கள் ஒருபுறம் இருக்கச் சாதாரணப் பெண்களால் சமாதானத்திற்காக என்ன செய்ய முடியும் என்று கேட்டார். அமைச்சர் அம்மையார் பெண்கள் போரை முடிவுக்குக் கொண்டு வர எவ்வளவோ செய்யலாம் என்றும் அவர்கள் இன்று தமது பிள்ளைகளையும் கணவர்களையும் போரிட அனுப்புவதன் மூலம் போரை நிறுத்தவதற்குப் பெரும் பணியை ஆற்றுவதாகவும் விளக்கினார். போர் மூலம் சமாதானம் என்ற கொள்கை இப்போது மேலும் தெளிவாகிறது அல்லாவா !

நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி
PUTHIYA POOMI
சுற்று 07 மார்ச்/ஏப்ரல் 2000 பக்கம் 8 விலை 10/= சுழற்சி 34
S. 47, 3வது மாடி, கொழும்பு மத்திய சந்தைக்கட்டிடத் தொகுதி, கொழும்பு 11, இலங்கை. தொலைபேசி இல. 435117, 335844

## சிங்கள பௌத்த பேரினவாதத்தின் பாசிச முகங்கள்

பேச்சுவார்த்தைகள் என்று பொ.ஐ.ஐ. முன்னணி அரசாங்கமும் ஐ.தே.கட்சியும் ஒரு புறம் கதைத்துவருகின்றன. அரசாங்கத்திற்கு வெளியில் இருக்கும் பௌத்த சிங்கள பேரினவாத சக்திகள் மறுபுறம் எதிர்ப்பு கூச்சலிட்டு வருகின்றனர். அச்சக்திகளில் முக்கியமாக கொள்ளப்படுகின்ற பயங்கரவாத எதிர்ப்பு தேசிய முன்னணி சிங்கள மக்கள் அனைவருக்கும் ஆயுதப் பயிற்சி அளித்து ஆயுதங்களை வழங்க வேண்டும் என்று அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுத்து இயக்கங்களை நடத்தி வருகிறது.

நீர்கொழும்பிலிருந்து புகையிரதத்தில் பயணம் செய்த கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி மாணவன் சக சிங்கள பயணிகளால் தாக்கப்பட்டுள்ளான். மொறட்டுவையிலிருந்து கொழும்பு நோக்கி வந்த பஸ்ஸிலிருந்து பஸ் நடத்துனரால் தமிழ் பயணி ஒருவர் தள்ளிவீழ்த்தப்பட்டுள்ளார். தமிழ்க் கட்சிகள் அறிக்கை விடுவதுடன் வரையறுக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டவர்கள் 'ஜனரஞ்சகமான' பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு முறைப்பாடு செய்வதற்கு அப்பால் கையாலாகாதவர்களாக இருக்கின்றனர்.

நோர்வேயின் அனுசரணையுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் அரசாங்கத்திற்குமிடையே பேச்சுவார்த்தை நடைபெற்று தீர்வு காணப்படுமோ இல்லையோ, அரசாங்கத்திற்கும் எதிர்கட்சிக்கும் உடன்பாடு ஏற்பட்டு தமிழ் மக்கள் உட்பட ஏனைய அடக்கப்படுகின்ற தேசிய இனங்களின் உரிமைகள் அரசியலமைப்பினூடே உறுதி செய்யப்படுமோ இல்லையோ அதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்படும்போது அவை ஆதரிக்கப்பட வேண்டியனவே. அவற்றை எதிர்த்து பௌத்த சிங்களப் பேரினவாதத்தை நிலைநாட்டும் நோக்கில் தீவிரவாத பௌத்த சிங்களப் பேரினவாதிகள் தீவிரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும்போது சிங்கள மக்கள் மத்தியிலுள்ள நம்பிக்கைக்குரியனவாகக் கொள்ளப்பட்ட சில இடதுசாரி சக்திகளும் வழமைபோல் அவற்றினிடையேயான கொள்கை முரண்பாடுகளை முதன்மை படுத்திக் கொண்டு மௌனமாக இருக்கிறார்கள்.

தீவிரவாத பௌத்த சிங்கள பேரினவாத சக்திகளை கையாள்வது எப்படி என்பது தொடர்பாக அரசாங்கமோ, எதிர்கட்சியோ யோசிக்காத வரையில் அவர்கள் தரப்பிலிருந்து நேர்மையான முய்றசிகள் எடுக்கப்படுகின்றனவா என்பது குறித்த ஐயம் இருப்பது தவிர்க்க முடியாது. அச்சக்திகள் நாடெங்கும் ஸ்தாபனரீதியாக பலப்பட்டு வருகின்றன. பயங்கரவாத எதிர்ப்பு தேசிய முன்னணி, சிங்கள வீரவிதான, தேசிய வளங்களை பாதுகாக்கும்படை என்ற பேரில் சிங்கள வியாபாரிகள், மத்தியதர வர்க்கத்தினர் போன்றோரை ஐக்கியப்படுத்தி வருகின்றன. பயங்கரவாத எதிர்ப்பு தேசிய முன்னணி சிங்கள இளைஞர்களுக்கு ஆயுதப்பிற்சி அளித்து வருவதாகவும் கூறப்படுகிறது. தேசியவளங்களை பாதுகாக்கும் என்ற பேரில் மாதாந்தம் ஆறு ஆயிரம் ரூபா கொடுப்பனவுடன் சிங்கள இளைஞர்களை அணிதிரட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கான பத்திரிகை விளம்பரங்களும் செய்யப்பட்டிருந்தன. பயங்கரவாத எதிர்ப்பு தேசிய முன்னணியின் அங்கத்தினர்களில் சிலருக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இந்தக் கூற்றுக்களில் உண்மை இருக்குமானால் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வும் தேசிய இனங்களுக்கிடையேயான ஐக்கியமும் சமாதானமும் இன்னும் நீண்டகால இலக்குகளாகவே இருக்கப்போகின்றன.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சக்திகளும் அதற்கு ஆதரவாக இயங்குகின்ற சக்திகளும் பொதுவாக இடதுசாரிகளும் ஜனநாயகவாதிகளும் தேசபக்த சக்திகளும் மேற்குறிப்பிட்ட தீவிரவாத சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளின் நடவடிக்கைகளை பாராமுகமாக விடவியலாது

நிக்கிரகுவாவில் கொன்ரா இயக்கத்தினர் போன்று கிழக்கு திமோரில் இந்தோனேசிய இயக்கத்தினர் போன்று இங்கும் ஒரு சிங்கள ஆயுத இயக்கம் உருவாக்கப்படுவதாகவே ஐயம் கொள்ளப்படுகிறது.

அச்சக்திகளுக்கு எதிரான சட்டரீதியாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கத்திற்கு அழுத்தங்களை கொடுப்பதுடன் அவற்றின் கருத்தியலுக்கு எதிராக மக்களுக்கு அறிவூட்டி மக்களை சரியான மாற்று அரசியல் திசை மார்க்கத்தில் அணிதிரட்டப்பட வேண்டும்.

ஆசிரியர் குழு.

# நேர்மையான பேச்சுவார்த்தையும் நியாயமான தீர்வுத் திட்டமும்

## முன்னெடுக்கப்படுமா ?

இலங்கையின் தேசியப் பிரச்சினை கடந்து சென்ற நூற்றாண்டு முழுவதும் வளர்க்கப்பட்டு கொடிய யுத்தமாக்கப்பட்ட ஒன்றாகும். அதற்குத் தீர்வு காண்பதாகக் கூறி காலத்திற்குக்



காலம் பேச்சுவார்த்தைகளும் தீர்வுத் திட்டங்களும் முன்வைக்கப்பட்டும் வந்தன. ஆனால் எதுவுமே சாத்தியமாகவில்லை. ஏறத்தாள ஐந்நூறு ஆண்டுகள் வரை இந்நாடு மேற்கின் கொலனி ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்தது. அவர்களது சுரண்டலும் அரசியல் அடக்குமுறைகளும் இந் நாட்டின் அனைத்து இன-மத-மொழி மக்களையும் அமுக்கி வைத்திருந்தன. இறுதியாக நாட்டைத் தமது கைகளில் வைத்திருந்த பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் அரசியல் சீர் திருத்தங்கள் செய்த சந்தர்ப்பங்களிலும், சுதந்திரம் என்னும் பெயரில் ஆட்சி அதிகாரத்தைக் கைமாற்றிக் கொடுத்துச் சென்றபோதும் இந் நாட்டின் சகல இனங்களுக்கும் சமவாய்ப்பையோ அன்றி நீதியான வகையில் அதிகாரப் பகிர்வையோ வழங்கி விட்டுச் செல்லவில்லை. பிரித்தாளும் சூழ்ச்சியில் வல்லவர்களான அவர்கள் தாம் இந் நாட்டை விட்டுச் சென்ற பின்பும் இங்குள்ள மக்கள் சமூகங்கள் தமக்குள் இன மத மொழி ரீதியில் அடிபட்டு நிற்பதையே தூரநோக்குடன் விரும்பினர். அதற்கான அடித்தளங்களைத் தமது காலத்திலேயே உருவாக்கி உறுதியாக்கிச் சென்றனர்.

அவர்களது ஏகாதிபத்திய விருப்பங்களைக் கடந்த அரைநூற்றாண்டு காலத்தில் இலங்கையின் உயர் ஆளும் வர்க்கங்கள் செவ்வனே நிறைவேற்றி வந்துள்ளனர். இலங்கையின் விரல் விட்டு எண்ணக் கூடிய நிலவுடமைக் குடும்பங்கள் பிரித்தானிய எசமானர்களின் காலடியில் கிடந்து தமது சொத்து சுகங்களைப் பாதுகாத்துக் கொண்டதுடன் அவர்களது தயவில் புதிய சூழலுக்கு ஏற்ப முதலாளித்துவ வளர்ச்சியையும் பெற்றுக் கொண்டனர். பராளுமன்ற ஆட்சியின் தலைவர்களாக இரண்டு பெரும் கட்சிகளிலும் இருந்து இன்றும் இருக்கும் தலைவர்கள் என்போர் இந்த உயர்நிலவுடமைக் குடும்பங்களின் முதலாளித்துவ வாரிசுகளாகவே உள்ளனர். இவர்களுக்கு அரவணைப்பும் ஆசியும் வழங்குவதில் உயர் மத பீடங்கள் குறிப்பாக பௌத்த பீடாதிபதிகள் முதன்மைப் பாத்திரம் வகித்து வந்துள்ளனர். இலங்கையின் பௌத்த மத பீடங்கள் இன்றும் நிலவுடமை ஆதிக்கமும் உயர்சாதி ஆதிக்கமும் சொத்து சுகம் அனுபவிப்பதில் முதன்மை பெற்றவர்களாகவும் இருந்து வருகின்றனர். இவர்கள் பெயரளவில் பௌத்த சிங்கள மக்களின் பிரதிநிதிகள் பாதுகாவலர்கள் என்று கூறிக் கொண்டாலும் சாதாரண பௌத்த சிங்கள மக்களின் அன்றாட வாழ்வில் இருந்து வேறுபட்ட ஒரு வாழ்வு முறையையே கொண்டுள்ளனர். உண்மையாகவே இந்த பௌத்த மத பீடங்கள் சிங்கள உயர் வர்க்க குடும்பங்களின் வர்க்க நலன்களை மட்டுமே பிரதி பலிக்கின்றனர். அந்த நோக்கத்திற்காக புத்தரின் போதனைகள் தமக்கு ஏற்ற விதமாக சுருக்கி அதுவே உண்மைப் புத்த தர்மம் என்றும் கூறுகின்றனர். பொருளாதார அடிப்படையில் சகல மக்கள் சுரண்டப்படுவதற்கும் அரசியல் ரீதியில் அடக்கப்படுவதற்கும் இதே பௌத்த மத பிடங்கள் அனுசாசனம் வழங்கி ஆசீர்வதிக்கின்றன. இனக்குரோதம் இனவாதமாக மாற்றப்படுவதற்கும் அது பேரினவாத மாக வளர்க்கப்படுவதற்கும் இறுதியில் தமிழ் முஸ்லீம் மலையக மக்களுக்கு எதிரான ராணுவ ஒடுக்கு முறையாக முறைப்படுத்தப்பட்டு யுத்தமாக முன்னெடுக்கப்படுவதற்கும் இதே பௌத்த மத உயர் பீடங்கள் முன்னணியில் இருந்து செயல்பட்டு வந்துள்ளன.

கடந்த நூற்றாண்டை நோக்குமிடத்து சிங்கள மக்கள் மத்தியில் உள்ள உயர் ஆளும் வர்க்க சக்திகள், பௌத்தமத உயர் பீடங்கள், அந்நிய ஏகாதிபத்திய சக்திகள் ஆகிய முத்தரப்பினரும் ஒருவருக்கு ஒருவர் ஊட்டமளித்து பாதுகாத்து தமக்குள் ஆலோசனை கலந்து மக்களை ஒடுக்கி அதிகாரம் செலுத்தி வந்துள்ளமையே


**வெகுஜனன்**

உண்மையாகும். இவர்களுடன் தமிழ் முஸ்லீம் உயர்வர்க்க சக்திகள் ஐக்கியப் பூண்டு வந்துள்ள அதே வேளை இன ஒடுக்குமுறை பாதை அப்பட்டமாக ஏனைய இனங்கள் மீது ஏவப்பட்டும் வந்துள்ளது. தமிழ் முஸ்லீம் மலையக மக்கள் மீதான பேரினவாத ராணுவ ஒடுக்குமுறையானது வர்க்கநலன்களையும் உயர்வர்க்க சொத்துடைய ஆட்சி அதிகாரத்தையும் உள் உறையாகக் கொண்டு நிற்கின்றது.

இன்று நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தமானது சாராம்சத்தில் ஆளும் பேரினவாத முதலாளித்துவ வர்க்க சக்திகளுக்கும் ஒடுக்கப்படும் தமிழ் மக்களுக்கும் இடையிலானதாகவே காணப்படுகிறது. பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்பது சிங்கள மக்களை ஏமாற்றவும் தமிழ் மக்களின் கவனத்தை திசை திருப்பவும் செய்யப்படும் தவறான பிரச்சாரமேயாகும். எனவே நாட்டு மக்கள் இன்றைய யுத்தத்தின் உண்மையான சாராம்சம் பற்றி புரிந்து கொள்ளாதவரை அதற்கு காரணமான தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு குறைந்த பட்சத் தீர்வைத்தானும் தேடிக் கொள்ள இயலாது. எனவே தேசிய இனப் பிரச்சினை யுத்தம் பற்றிய சரியான அறிவூட்டலும் விழிப்புணர்வும் மக்கள் மத்தியில் குறிப்பாகச் சிங்கள மக்கள் மத்தியில் முன்னெடுக்கப் படுதல் வேண்டும். அதற்கான அரசியல் தலைமைத்துவம் ஒன்று கட்டியெழுப்பப்படுதல் வேண்டும். அத்தகைய தலைமைத்துவம் இடதுசாரி ஜனநாயக சக்திகளால் வழிநடத்தப்படல் வேண்டும். இதில் பாராளுமன்ற சந்தர்ப்பவாத இடதுசாரிகளும் ஜே.வி.பி. போன்ற பேரினவாத நிலைப்பாட்டைக் கொண்ட போலி இடதுசாரிகளும் உள்ளடங்க முடியாது. இவற்றுக்கு அப்பாலான நேர்மையான சக்திகள் கடுமையான முன் முயற்சிகளின் ஊடாக முன்னுக்கு வரல் வேண்டும்.

அத்தகைய நிலை தோன்றுவதன் மூலமே தேசிய இனப்பிரச்சினைக்கு நேர்மையான பேச்சுவார்த்தையும் நியாயமான தீர்வுத் திட்டமும் முன்னெடுக்கப்பட முடியும். இப்போது பேச்சுவார்த்தை தர்வுத் திட்டம் என்பதன், புதிய ஒரு முயற்சியில் நோர்வேயின் மூன்றாம் தரப்பு அனுசரணையுடன் விடயங்கள் முன்னெடுக்கப்படுவதற்கு ஆரம்ப முயற்சிகள் செய்யப்பட்டுகின்றன. இது எந்தளவிற்கு முன்னுக்குச் செல்லும் வெற்றிபெறும் என்பதில் பல்வேறு தடைகள் சிக்கல்கள் உண்டு. அரசாங்கம் தனது நிலைப்பாட்டில் இறுதிவரை உறுதியாக இருக்குமா ? பௌத்த, சிங்கள மத பீடங்களுக்கும் பேரினவாத அமைப்புக்களுக்கும் அடிபணிந்து போகுமா ? அச் சக்திகள் தத்தமது தேவைகளுக்கு ஏற்றவாறு நடந்து கொள்ள முற்படும் போது அரசாங்கம் எத்தகைய நிலைப்பாட்டை எடுக்கும்? விடுதலைப் புலிகள் எவ்வாறு தமது பக்க காய்களை நகர்த்தப்போகிறார்கள். இவை எல்லாம் முக்கிய கேள்விகள்.

மேலும் நோர்வே நாடு ஒரு மேலாதிக்க நோக்கம் கொண்ட நாடு அல்ல. ஆனால் அம் முதலாளித்துவ நாடு அமெரிக்காவினால் மறைமுக செல்வாக்கு செலுத்தப்படக் கூடிய நாடு என்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும். அதேவேளை இலங்கையின் இன்றைய சிக்கலும் யுத்த அகோரமும் கொண்ட சூழலில் மூன்றாம் தரப்பு அனுசரணை என்பது நிராகரிக்க முடியாத ஒரு நிர்ப்பந்தமாகும். அந்தவகையில் நொர்வேயின் அனுசரணையை மிகுந்த கவனத்துடன் ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை. ஆனால் முன்னைய கால அனுபவங்களை



பட்டறிவாகக் கொண்டு செயல்படுவது ஒரு அவசியமாகும்.

தேசிய இனப் பிரச்சினையை முற்று முழுதாகவும் இதயசுத்தியுடன் இன்றைய நவகொலோனியல் அமைப்பு முறையின் கீழ் முதலாளித்துவ அரசு நிர்வாகத்தின் கீழ் தீர்வுக்கு கொண்டுவர இயலாது என்பது அடிப்படையானதாகும். ஆனால் மக்களை நாளாந்தம் பல முனைகளிலும் பலி கொண்டு வரும் கொடிய யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்படுவதை எவ்வகையிலும் எதிர்க்க முடியாது. எந்த ஒரு சாட்டுதலைச் சொல்லியாவது பேச்சுவார்த்தை அரசியல் தீர்வு முயற்சியை எதிர்ப்பது நேர்மையான மக்கள் சார்பு நாட்டுப் பற்று மிக்க செயலாக இருக்க முடியாது. அது அப்பட்டமான பேரினவாதமாகவே இருக்க முடியும்.

இந் நிலையில் நேர்மையான பேச்சுவார்த்தை நியாயமான தீர்வுத் திட்டம் என்பன வற்றை எந்தளவுக்கு அரசாங்கமும் பிரதான எதிர்க் கட்சியும் முன்னெடுக்கப் போகின்றன என்பதே ஒடுக்கு முறைக்கு உள்ளாகி நிற்கும் தமிழ் முஸ்லீம் மலையக மக்களின் எதிர்பார்ப்பாகும்.

OOO

நன்றி - நூலகத்திட்டம்



# தொண்டமான் மறைவுக்குப் பின் இ. தொ. கா. செல்லும் பாதை

**இ.தொ.கா.** விலிருந்து பல தலைவர்களை ஓரம் கட்டுவதில் தொண்டமானுக்கு நிகராக எவரும் இருக்கவில்லை. குறிப்பாக அஸீஸ், வெள்ளையன், சி.வி. வேலுப்பிள்ளை போன்றவர்கள் இ.தொ.கா. விலிருந்து வெளியேற்றப் பட்டமை. தொண்டமானின் அரசியல் வரலாற்றில் 1994 இல் எஸ் செல்லசாமி வெளியேற்றப்பட்டமை மிகவும் முக்கியமான சம்பவமாகிறது. ஏனெனில் அதற்கு முதலில் இடம்பெற்ற வெளியேற்றங்களை விட இவ்வெளியேற்றத்தால் சட்டரீதியான ஸ்தாபன விடயங்களில் தொண்டமானின் தலைமைக்கு பாதிப்பாகவே அமைந்தது. இ.தொ.கா. தொழிற்சங்கம், அரசியல்பிரிவு என்பவற்றின் சட்டபூர்வமான செயலாளராக தொடர்ந்து செல்லசாமியே இருந்து வருகிறார். இ.தொ.கா. வின் அரசியல் பிரிவின் தேர்தல் சின்னமான சேவலுக்கு செல்லசாமியே உரித்துடையவராக கொள்ளப்பட்டுள்ளார். அவ்வுரிமையை தொடர்ந்து தன்னகத்தே வைத்துக் கொள்வதற்கான வழக்குகள் இன்னும் நீதிமன்றங்களில் விசாரணைகள் முடியாத நிலையில் இருக்கின்றன.

இந்த இழுபறியான நிலை இருக்கும் போதுதான் 1999 ஆம் ஆண்டு மாகாணசபை தேர்தலை இந்திய வம்சாவளி மக்கள் பேரணி என்ற அமைப்பை அறிமுகம் செய்வதில் தொண்டமான் முன் நின்றார்.

சரிந்திருந்த இ.தொ.கா.வின் செல்வாக்கை நிமிர்த்திக் கொள்வதற்காகவும் தேர்தலில் போட்டியிடுவதற்கு புதிய சின்னமொன்றை தேடிக் கொள்வதற்காகவும் இந்திய வம்சாவளி மக்கள் பேரணி அறிமுகம் செய்யப்பட்டது. தேர்தலுக்கு முன்பு அது தேர்தல் ஆணையாளரால் அங்கீகரிக்கப்படாததால் இந்திய வம்சாவளி மக்கள் பேரணி என்ற பேரில் தொ.தே. சங்கத்தின் சின்னமான மயில் சின்னத்தில் போட்டியிட்டனர்.

இப் பேரணியின் தலைவராக எஸ். தொண்டமான் இருந்தது மட்டுமன்றி அவரால் குட்டிச்சங்கங்கள் என்று ஏளனம் செய்யப்பட்ட (ஏறக்குறைய) எல்லா சங்கங்களையும் அவரது தலைமையை ஏற்றுக்கொள்ளும் திட்டத்தில் வெற்றிபெற்றார். இடதுசாரி சங்கங்கள் என்று தம்மை தாமே கூறி தொண்டமானைத் துரோகி என்றவர்கள் கூட தொண்டமானின் தலைமையை ஏற்றுக் கொண்டனர்.

அதன் மூலம் தேர்தல் தேவையை பூர்த்தி செய்ய முடிந்தது மட்டுமன்றி ஏனைய சங்கங்களின் முக்கியத்துவம் குறைந்தது. குறிப்பாக மயில் சின்னத்தில் உரித்தான கட்சியின் தலைவர் டி. அய்யாத்துரை 1993 இல் போட்டியிட்டு மாகாணசபை உறுப்பினரானபோதும் 1999 இல் அவரால் முடியவில்லை. ஏனைய சங்கங்களை கொண்டு கூட்டணியாகி தேர்தல் கேட்டபோதும் கொழும்பு மாவட்டத்தை தவிர ஏனைய இடங்களில் இந்தியவம்சாவளி மக்கள் பேரணி என்ற பேரில் வெற்றி பெற்றவர்கள் எல்லாம் இ.தொ.கா. அபேட்சகர்களே ஆவர்.

தேர்தலுக்குப் பிறகு மயில் சின்னத்தை இந்திய வம்சாவளி மக்கள் பேரணிக்கு வழங்கி உதவிய தொ. தே. சங்கம் முதலில் வெளியேறியது. பின்னர் மேல் மாகாணசபையில் கொழும்பு மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட மனோ கணேஷன் அபிப்பிராய பேதமிருப்பதாக வெளிப்படையாக கூறிவந்தார். ஏனைய அமைப்புகளும் இந்தியவம்சாவளி மக்கள் பேரணியில் இ.தொ.கா. மேலாதிக்கம் செலுத்துவதாக கூறி ஒதுங்கிக் கொண்டன. இ.தொ.கா. அபேட்சகராக இருந்து மாகாணசபை உறுப்பினரான கந்தசாமி நாயுடு தொ. தே. சங்கத்துடன் சேர்ந்து கொண்டார்.

எனினும் இ.தொ.கா. பெயருக்கு ஒரு சில சங்கங்கள் இருப்பதாகக் கூறிக் கொண்டு பேரணியின் முழுக் கட்டுப்பாட்டையும் எடுத்துக்கொண்டது. பேரணியின் மாநாடு நடந்ததாக செய்திகள் வெளி வந்தன. அதன் தலைவராக இ.தொ.கா. எம்பி ஏ.எம்.டி. ராஜனும் செயலாளராக இ.தொ.கா. எம்.பி. யோகராஜனும் தெரிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. அதற்கு தேர்தலில் போட்டியிடும் அங்கீகாரத்தை பெறுவதற்கான விண்ணப்பம் தேர்தல் ஆணையாளரின் பரிசிலனைக்காக சமர்ப்பிக்கப் பட்டுள்ளதாக அறிய முடிகிறது. அதற்கு அங்கீகாரம் கிடைக்கவும் கூடும்.

> *பேரினவாதக் கூச்சல்களுக்குப் பின்னால் சொத்து சுகம் பதவி அந்தஸ்துக்களுக்கான உயர் வர்க்க நலன்களை கெட்டியாக இருந்து வருகின்றன.*

ம. அழகேசன்

எனவே இந்திய வம்சாவளி பேரணி அமைக்கப்பட்டதன் நோக்கங்கள் ஏறக்குறைய நிறைவேறி விட்டதாக கொள்ளலாம். அதாவது. இ.தொ.கா.விற்கு தேர்தல் சின்னத்தை பெற்றுக்கொள்வது இழந்த செல்வாக்கை பெறுவது, இ.தொ.கா.விற்கு எதிரானவர்களை ஓரம் கட்டுவது போன்றன நிறைவேற்றப் பட்டுள்ளன.

தொண்டமானின் இறப்புக்கு பிறகும் சந்திரிகா அரசாங்கத்துடன் இ.தொ.கா. மிகவும் நெருக்கமாகியுள்ளது. தொண்டமானின் அமைச்சர் பதவி அவரின் பேரன் ஆறுமுகம் தொண்டமானுக்கு கொடுக்கப் பட்டது. ஜனாதிபதி தேர்தலுடன் ம.ம.மு. தலைவர் பெ. சந்திரசேகரன் ஐ.தே. கட்சியின் பக்கம் சார்ந்ததால் அவர் வகித்த பிரதி அமைச்சர்ப் பதவிக்கான பொறுப்பும் ஆறுமுகம் தொண்டமானிடம் கையளிக்கப் பட்டுள்ளது. அவர் ஜனாதிபதியுடன், மிகவும் நெருக்கமானவராக இருப்பதால் இ.தொ.கா.விற்குள் அவருடன் அபிப்பிராயப் பேதம் கொண்டவர்களாக தென்பட்டவர்களும் இப்போது மௌனமாகியுள்ளனர். பொதுத் தேர்தலில் 'டிக்கற்' கிடைக்காமல் போகலாம் என்ற பயமிருக்கலாம். ஐ.தே.கட்சி அவர்கள் எதிர்பார்த்த வெற்றியை பெறாததும் காரணமாக இருக்கலாம்.

எனவே பின்தங்கிய சமூகமொன்றில் முதலாளித்துவ அமைப்பொன்று எவ்வாறு அதனுடைய மேலாதிக்கத்தை வற்புறுத்துமோ அதே மேலாதிக்கத்தை இ.தொ.கா. வற்புறுத்தி நிற்கிறது. அமைப்பிற்குள்ளும் கூட 'ஜனநாயகம்' மறுக்கப்பட்ட நிலையில் தலைமைகளின் ஆதிக்கமே மேலோங்கியிருக்கும். அது தொண்டமான் தொடங்கி ஆறுமுகம் தொண்டமான் ஊடாகத் தொடரும் விவகாரமாக இருக்கிறது. அவர் அமைச்சுகளை பொறுப்பேற்று அரசாங்கத்தின் பங்காளியாகி அவரது ஆதிக்கத்தை நிலைநாட்டுதவதில் மும்முரமாக இருந்துவருகிறார். மறைந்த தொண்டமானின் அடியொற்றி பேரன் தொண்டமான் இ.தொ.கா.வின் ஆதிக்கத்தை மலையகத்தில் தொடர்ந்தும் திணித்து நிலை நிறுத்தி வருகின்றார். இது பற்றி மலையக மக்கள் எந்தக் கோணத்தில் பார்க்கப் போகிறார்கள் என்பது ஒரு பிரதான கேள்வியாகும். மலையக மக்கள் மத்தியில் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் பற்றிய ஒரு விதத் தோற்றத்தைக் கட்டியெழுப்ப அவரைச் சுற்றியுள்ளவர்கள் முயற்சி செய்கிறார்கள். அது எவ்வளவிற்கு சாத்தியமாகும் என்பதை வரும் குறுகிய காலத்தில் கண்டு கொள்ள முடியும்.

❖❖❖

## ஒரு கடிதம் — விடிவைத் தேடும் மலையகம்

இந் நாட்டின் நமது மலையக மக்களுக்கு சுமார் ஒன்றே முக்கால் நூற்றாண்டு கால வரலாறு உண்டு. இக் காலப்பகுதி என்பது கணிசமான நீண்ட ஒன்றாகும். வேறு சில நாடுகளிலே இருந்து மற்றொரு நாட்டிற்குப் புலம் பெயர்ந்து அங்கே நிலை கொண்ட சில மக்கள் சமூகங்கள் இவ்வாறான ஒரு காலப் பகுதியில் தம்மை பல முனைகளாலும் வளப்படுத்திக் கொண்ட வரலாற்றைக் காண்கின்றோம். உதாரணமாக அமெரிக்காவில் சென்று குடியமர்ந்த அயர்லாந்துக் காரர்கள், அவுஸ்ரேலியாவில் சென்று குடியமர்ந்த வெள்ளையர்கள், ஆபிரிக்க நாடுகளில் நிரந்தரமாகி விட்ட ஐரோப்பியர்கள் குறிப்படத் தக்கவர்கள். ஆனால் இந்தியாவில் இருந்தும் ஆபிரிக்காவில் இருந்தும் வேற்று நாடுகளுக்கு தொழிலாளர்களாக பண்ணை அமைகளாக் கொண்டு செல்லப் பட்டு குடியமர்த்தப்பட்ட மக்களது வாழ்க்கை நிலை இன்றும் மிகத் தாழ்ந்த நிலையிலேயே இருந்து வருகின்றது. இந்தியாவில் இருந்து கூட்டிச் செல்லப்பட்ட நமது மக்கள் பிரித்தானியக் கொலனிகளில் குடியமர்த்தப்பட்டு, நடத்தப்பட்ட விதம் மிகவும் கேவலமானது. இலங்கையிலும் நிலைமை மோசமானதாகவே இன்றும் இருந்து வருகின்றது. இது நமது மக்கள் செய்த பழியோ பாவங்களோ அல்ல. கொலனித்துவவாதிகளால் வஞ்சிக்கப் பட்டு கொடுமைக்குள்னான ஒரு அவல நிலையாகும். இவ்வாறு நமக்கும் நமது பரம்பரையினருக்கும் ஆறாத காயங்களையும் மாறாத வடுக்களையும் ஏற்படுத்தி எமது வாழ்வைச் சூறையாடி மனித மந்தைகள் போல் ஆக்கிவிட்டுச் சென்ற அந்த வெள்ளை ஏகாதிபத்தியவாதிகள் மீதான வெறுப்பும் வெஞ்சினமும் என்றுமே தணிந்துவிடப் போவதில்லை.

அந்த வெள்ளத்துரைமார் சென்று விட்ட போதிலும் அவ்விடத்தை நிரப்பிக் கொண்ட இந்நாட்டின் கறுத்த துரைமார் நமக்கு எதைத்தான் செய்தார்கள். அவர்கள் விட்ட இடத்திலிருந்து தொடரவே செய்தனர். இன்றும் அதே வழியில் தொடர்ந்து கொண்டே செல்கின்றனர். வெள்ளை கறுத்த துரைமார்கள் தான் நம்மை வஞ்சித்து மோசடி செய்து சுரண்டி வெறும் உழைப்பு யந்திரங்களாக ஆக்கி வைத்தார்கள் என்றால் நம்மவர்கள் மத்தியில் இருந்து வந்தவர்கள் எதைச் செய்தனர். தொழிற் சங்கம், கோரிக்கைகள். போராட்டங்கள் என்று கூவி அழைத்தார்கள். நாமும் அணிதிரண்டோம். சந்தா கொடுத்தோம். வேலை நிறுத்தங்கள் செய்தோம். சங்கங்களுக்காக போட்டி போட்டு நமக்குள் வெட்டுகள் குத்துக்களும் பட்டோம். அவற்றை எல்லாம் ஏணிப்படியாக்கிக் கொண்ட தொழிற்சங்கத் தலைமைகள் அரசியல் தலைவர்களானார்கள். வாக்குரிமை பெறப்பட்டபின் வாக்குகளையும் பயன்படுத்தி எம்மை ஏமாற்றிக் கொண்டார்கள். ஒரு புறம் சந்தாப்பணம் மறுபுறம் வாக்குகள் இரண்டின் மூலமாகவும் தங்களைத் தாங்களே உச்சாணி நிலைக்குக் கொண்டு சென்றனர். மத்தியிலும் மாகாண பிரதேச மட்டங்களிலும் கௌரவமிக்க உறுப்பினர்கள், வீடுகள், வியாபாரங்கள் சுய முன்னேற்றங்கள் சுற்றி இருந்தவர்களுக்கு சலுகைகள் யாவும் கிடைத்தன. அவர்கள் பதவியும் பட்டங்களும் அந்தஸ்தும் பணச் செல்வங்களும் மிக்க தனியொரு சமூகம் ஆகினர். அவர்கள் சாதிபேசினர். சாதி காத்தனர். சாதி காரணத்தால் தலைவர்களும் ஆகினர் இத்தகையோர் விரல் விட்டு எண்ணத் தகுந்தவர்களேயாவர். ஆனால் நாட்டின் சனத்தொகையில் 5.5 சதவீதத்தை கொண்ட மலையக மக்களாகிய எமது நிலைதான் என்ன ? மலையக மக்களின் மிகப் பெரும்பான்மையினர் பெரும் தோட்டத் தொழில் துறையில் தொழிலாளர்களாகவே இருந்து வருகின்றனர். அவர்கள் பொருளாதார அரசியல் சமூக கலாச்சாரக் கல்வி சுகாதாரத் துறைகளில் எந்தளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளனர். ஒட்டு மொத்தத்தில் மலையக மக்களாகிய நாம் இலங்கையின் மிகப் பின்தங்கிய ஒரு சமூகமாகவே தொடர்ந்து வாழ்ந்து வருகின்றோம். நாம் ஒரு தேசிய இனமாக வளர்வதற்குரிய அடிப்படைகளைக் கொண்டுள்ள போதிலும் அதனைப் பூரணப்படுத்துவதற்கான பாதையில் எந்தளவிற்கு நம்மவர்கள் எமக்கு அரசியல் தலைமைத்துவத்தை அளித்துள்ளார்கள். எங்களை . ஒரு தேசிய இனம் என்று குறிப்பிட்வோ சிங்கள மக்கள் மத்தியில் வாழும் யதார்த்தத்திற்கு அமைவாக சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சுயாட்சி உள் அமைப்புகள் வாயிலாக எமது இருப்பை உறுதி செய்து கொள்ளவோ இந்த அரசியல் தலைமைகளால் ஏன் கோரிக்கை முன் வைக்க முடியவில்லை. இலங்கையின் தேசிய இனப்பிரச்சிணையில் நாம் கணக்கில் கொள்ளப்படவில்லை. அதையிட்டு தலைமைகள் அக்கறைப்படவும் இல்லை.

இவை ஒருபுறமிருக்க நம்மவர்கள் மத்தியில் கல்வி சமூகப் பண்பாட்டின் நிலைதான் என்ன ? கல்வியும் அரசாங்க உத்தியோகமும் என்றால் அது ஆசிரியத் தொழிலுக்குள் தான் அடக்கம். அங்கேயும் போட்டி பொறாமை ஆளையாள் அமுக்கி உயரே செல்வதில் சமூக அக்கறை அற்றுப் போன சூழல். மலையகத்தில் தன்தன் சுய முன்னேற்றம் மட்டுமே குறி. ஏ.எல் அல்லது ஓ.எல்லுடன் ஆசிரியராகும் ஒருவர் இறுதிநிலைச் சம்பளமான பதினேழாயிரம் ரூபா வரையான பதவியை நோக்கிப் படியேறும் கடும் முயற்சி. அத்தகையவருக்கு சமூக அரசியல் அக்கறை எல்லாம் புறம்போக்கான விடயமாகி விடுகின்றன. தொழில், பதவி, உயர்வு வாழ்க்கைக்கு ஊதியம் போன்றன நிராகரிக்கக் கூடியவை அல்ல. ஆனால் 'தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டு பாழ்பட்டு நிற்கும்' நமது மலையக சமூகம் பற்றிச் சிந்திக்க அதற்காகச் சில மணிநேரமாவது செயல்பட மறுக்கும் எவரும் எந்தப் பெரிய கல்வி கற்றும் பதவி பெற்றும் பகட்டுடன் வாழ முற்பட்டும் என்னதான் பயன். சிலர் இன்றைய கொடுமை மிகு ஏற்றத்தாழ்வு மிக்க சமூக அமைப்பிலே சொர்க்கம் கண்டுவிட ஓயாது ஓடிக் கொண்டிருக்கிறார்களே. அவர்களைப் பார்க்க மனம் சகிக்கவில்லை. இது நமக்கு மட்டுமல்ல என்று சிலருக்கு கோபமும் வரலாம். ஏனைய சமூகங்களில் ஓரளவுக்கு சிலவகை வளர்ச்சிகள் உண்டு. ஆனால் நமது சமூகத்தின் நிலை என்ன என்பதை சிறிதளவாவது நோக்கினால் நமது சமூக அக்கறையின் அளவு தெரிந்து விடும். எனவே நமது மலையக சமூகத்தில் இளம் தலைமுறையினர் மத்தியில் சமூக அரசியல் விழிப்புணர்வும் அதற்கான செயல்வடிவமும் அவசியமாகிறது. இதனை தூரநோக்குடன் அர்ப்பணிப்பு மனப் பாங்குடனும் சிந்திக்கவும், செயல்படவும் மறுத்தால் இந்த நூற்றாண்டிலும் நம்மவர்களுக்கு விடிவும் வெளிச்சமும் ஏற்பட மாட்டாது. நாளைய சந்ததி நம்மை பழி கூறித் திட்டிக் கொள்ளவே செய்யும். அது நமக்கு வேண்டுமா? இது ஒரு இளம் ஏழை மலையகத்தவனது இதயக் குமுறல்.

மணியப்பன்.

## கடல் கடந்து தமிழ் அகதிகள் வாழும் நாடுகளும், எண்ணிக்கையும்

| | | | |
|---|---|---|---|
| இந்தியா - முகாம்களில் | 60.185 | அமெரிக்கா | 15.000 |
| முகாமுக்கு வெளியல் | 37.000 | ஒஸ்திரேலியா | 8.000 |
| 96 ஆடிக்கு பின் வந்தவர்கள் | 8.750 | பின்லாந்து | .200 |
| நிரந்தரமாக வாழத் தயாராகிவிட்டவர்கள். | 1.500 | ஜெர்மனி | 60.000 |
| பிரான்சு | 40.000 | இலண்டன் | 35.000 |
| நோர்வே - சுவிடன் | 6.000 | நெதர்லாந்து | 15.000 |
| பெல்ஜியம் | 1.000 | நியுசிலாந்து | 1.000 |
| டென்மார்க் | 8.000 | சுவிச்சர்லாந்து | 36.000 |
| தாய்லாந்து | 5.000 | கனடா | 125.000 |
| கம்போடியா | .500 | மெக்சிகோ | .300 |
| வியட்னாம் | 1.000 | சிலி | .200 |
| இந்தோனிசியா | 3.000 | ருமேனியா | .750 |
| போர்ச்சுவானா | 2.000 | பல்கேரியா | .800 |
| கென்யா | 1.200 | ரசியா உக்ரேன் | 8.000 |

தகவல்: 'தேசபக்தன்' சஞ்சிகை – கனடா

இலங்கையில் 213.000 தமிழ் மக்கள் அகதிகளாக உள்ளனர்.

நன்றி - நூலகத்திட்டம்



# அண்ணன் காட்டிய வழி (1)

## குடும்பத் தகராற்றின் தொடக்கங்கள்

திராவிடர் கழகம் என்கிற 'குடும்பத்தில்' மணியம்மையைச் 'சிற்றன்னை'யாக ஈ.வெ. ராமசாமி என்கிற 'தந்தை' மறுமணம் செய்ததால் அண்ணன் அண்ணாதுரையும் அக்கா சத்தியவாணி முத்துவும் இன்னும் பல பிள்ளைகளும் வீட்டை விட்டு வெளியேறியதுடன் புதிதாக ஒரு அரசியற் குடும்பத்தை ஏற்படுத்தியது தமிழக வரலாறு.

அது நடந்து ஒரு வருடத்தின் பின்னர் தமிழ்க் காங்கிரஸ் என்ற வட இலங்கைத் தமிழ்க் குடும்பம் பிளவு பட்டது. முன் கூறியதில் அரசியல் இருந்தது. அதைத் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் குறைவு படுத்தி, வெறுமனே பகுத்தறிவுச் சிந்தனைக்கு விரோதமான முறையில் ஈ.வெ.ரா. வயது குறைந்த பெண்ணை மணந்தார் என்பதாலேயே பிளவு நடந்தது என்று வரலாற்றைத் திரிபு படுத்தினார்கள். ஈ.வெ.ரா. மணியம்மை திருமணம் பகுத்தறிவு விரோதமானதுமில்லை, பிளவிற்கான உண்மையான காரணமுமில்லை என்பது காலப் போக்கில் தெரிய வந்தாலும் 'அண்ணா' சுமத்திய பழி ஈ.வெ.ராவிடமிருந்து பலரை முறித்துக் கொண்டு போக உதவி செய்தது.

இலங்கையின் நிகழ்வு வேறுவிதமானது. தனக்குப் பதவி கிடைக்காததாலேயே எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஜி.ஜி. பொன்னம்பலத்திடம் இருந்து பிரிந்தார் என்ற குற்றச்சாட்டு மக்கள் நடுவே எடுபடவில்லை. ஆயினும் அது ஆதாரமற்றது என்று சொல்வது கடினம். செல்வநாயகத்தின் மருமகன் ஏ.ஜே. வில்சன் தன் மாமனார் சார்பான கருத்தே மெய்யானது என்று பல இடங்களில் வலியுறுத்தி வந்தாலும் அவரிடமும் முழுமையான ஆதாரங்கள் இல்லை. எவ்வாறாயினும், தமிழ்க் காங்கிரஸ் பிளவுபடுவது தவிர்த்திருக்க முடியாதது. ஏனெனில் செல்வநாயகத்தை விடவும் கடுமையாக ஜி.ஜி. பொன்னம்பலத்துடன் முரண்பட்டோர் தமிழ்க் காங்கிரஸிற்குள் இருந்தார்கள். செல்வநாயகத்தை விட முற்போக்கான நிலைப்பாட்டையுடைய கு. வன்னியசிங்கம் தலைமையில் இந்தப் பிளவு ஏற்பட்டிருந்தால் தமிழரசுக் கட்சியின் வரலாறு சற்று வித்தியாசமாக அமைந்திருக்கலாம். ஆயினும் தமிழ்த் தேசியவாதத்தின் வர்க்கத் தன்மையை நாம் கருத்திற் கொண்டால் நீண்ட காலத்தில் அதிகம் வேறுபாடு இருந்திருக்குமோ என்பது தமிழ்த் தேசியவாதத்திற்கு வெளியே செயற்பட்டவர்கள் மீது தான் தங்கியிருந்திருக்கும். இது பற்றிய ஊகங்கள் வரலாற்றுப் புனைகதைகளின் தளத்தையும் மீறலாம் என்பதால், அதைத் தவிர்த்து நிகழ்வுகளின் அடிப்படையில் வரலாற்றை நோக்குவோம்.

1952ல் நடந்த பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி வடக்கில் ஏறத்தாழ எல்லாத் தொகுதிகளிலும் யூ.என்.பி. தமிழ்க் காங்கிரஸ் கூட்டுக்கு எதிராக வேட்பாளர்களை நிறுத்தியது. திருகோணமலையில் ந.இ. இராஜவரோதயம் போக, கிழக்கில் வேட்பாளர்கள் யாருமே அகப்படவில்லை. திருகோணமலையில் இராஜவரோதயத்தின் வெற்றிக்கு அவர் மீதான தனிப்பட்ட வெகுஜனப் பிரியம் ஒரு முக்கிய காரணி. வடக்கில் வன்னியசிங்கம் அற்ப பெரும்பான்மையாலேயே வெல்ல முடிந்தது. என்றாலும், தமிழரசுக் கட்சியின் பின்னால் ஒரு புதிய படித்த இளைஞர் பரம்பரை உருவாகியது. அனல்கக்கும் மேடைப் பேச்சும் இக் காலகட்டத்தின் பின்னரே அரசியல் மேடைகளில் ஆதிக்கம் செலுத்தியது. தமிழரசுக் கட்சி மேடைகளில் அறிமுகமான இரண்டு இளம் பேச்சாளர்கள் இரட்டைப் பீரங்கிகள் போல அதிரவைக்கும் முறையில் பேசிப் பொது மக்களைக் கவர்ந்தனர்.

தமிழரசுக் கட்சியின் புதிய பேச்சாளர் பரம்பரையின் பேச்சுமுறையில் தமிழகத்தின் திராவிட முன்னேற்றக் கழகப் பேச்சாளர்களின் சாடையை யாரும் தவறவிட்டிருக்க முடியாது. அந்த ஒற்றுமை மிகவும் மேலோட்டமான ஒன்றாகும் என்பதையும் பலர் கவனித்திருந்தனர். திராவிட முன்னேற்றக்கழகம் தன் 'ஆரிய' விரோத, சாதிய விரோத அரசியலையும் பகுத்தறிவு வாதத்தையும் பிராமண எதிர்ப்புணர்விலிருந்தே விருத்தி செய்தது. சிறுபான்மையான பிராமணருடைய ஆதிக்கத்துக்கு

> **தமிழகத்தில் திராவிட கழகக் குடும்பத்தில் பிளவு நடந்தது போன்று இங்கும் காங்கிரஸ் குடும்பத்தில் பிளவு ஏற்பட்டது.**

எதிரான ஒரு அரசியற் போக்கை இங்கு எண்ணிக்கையின் பெரும்பாலோராக இருந்த ஒரு சாதியினரின் பேரால் நிலைநிறுத்தப்பட்ட சாதியத்தைத் தாக்கப் பயன்படுத்துவது பாராளுமன்ற அரசியலுக்கு உதவாது. எனவே தி.மு.க. மேடைப் பேச்சின் கவர்ச்சிகரமான சில கூறுகட்கு அப்பால் எதையுமே தமிழரசுத் தலைமை விரும்பியிராது. குறிப்பாக, மதவிரோதக் கருத்துக்கள் ஊக்குவிக்கப்படவில்லை. மறுபுறம் தமிழினதும் தமிழரதும் தொன்மையும் மேன்மையும் கங்கைகொண்டதும் கடாரம் வென்றதும் போன்ற கதைகள் மிகவும் விரும்பப்பட்டன. அமிர்தலிங்கம் அதில் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தார்.

திராவிட இயக்கப் பகுத்தறிவுக் கருத்துக்களாக பெரிதும் ஈர்க்கப்பட்டவர்களும் இருந்தார்கள். மட்டக்களப்பின் செ. இராசதுரை இவர்களுள் ஒருவர் எனலாம். ஆயினும் அக் கருத்துக்களை நடைமுறையிற் பிரயோகிக்க ஏற்ற சூழல் வடக்கிலோ, கிழக்கிலோ இருக்கவில்லை. எவ்வாறாயினும், அந்தக் காலச் சூழலில் தென்னிந்தியத் திரைப்படங்களூடாகவும் திராவிட இயக்க ஏடுகளூடாகவும் சிறுபிரசுரங்கள் நூல்கள் ஆகியனவூடாகவும் இலங்கையை எட்டிய சமூகச்சீர்திருத்தச் சிந்தனைகள் இளைஞர்கள் பலரிடையே ஒரு வகையான தமிழ் - திராவிட உணர்வையும் பகுத்தறிவுச் சிந்தனையையும் கிளறி விட்டன. தமிழரசுக்கட்சிக்குள் இச் செல்வாக்கு மெல்ல மெல்ல ஊடுருவத் தொடங்கியது.

இறுதிவரை ஜி.ஜி. பொன்னம்பலத்தினதும் எஸ்.ஜே.வி. செல்வநாயத்தினதும் கூட்டு உடைமையாயிருந்த 'சுதந்திரன்' நடைமுறையில் செல்வநாயகத்தின் ஆளுமையின் கீழ் தமிழரசுக் கட்சியின் அதிகாரபூர்வமற்ற ஏடாக இருந்து வந்தது. தமிழிற் சிறப்பாகச் செயற்படும் ஆற்றல் இல்லாத செல்வநாயகம் எஸ். டி. சிவநாயகம் உட்பட்ட திறமைசாலிகள் பலரை நம்பியே சுதந்திரனை இளைய பரம்பரையினருக்கு விரும்பத்தக்க ஏடாக்கியது. ஆயினும் திராவிட இயக்கத்துடன் தமிழரசுக் கட்சியை அடையாளங்காட்டாதளவுக்குக் கண்காணிப்பும் பேணப்பட்டது.

தமிழரசுக் கட்சி மேடைகளில் செல்வநாயகம், வன்னியசிங்கம், நாகநாதன் போன்றோர் பேசினாலும் பொது மக்கள் உண்மையிற் கேட்க விரும்பிய உரைகள் ராஜதுரை, அமிர்தலிங்கம் போன்றோருடையனவே. பின்னவரின் மனைவியான மங்கையற்கரசி அமிர்தலிங்கம் பாடுவதைக் கேட்கவும் மக்களிடையே ஆர்வம் இருந்தது. இப்போது முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகராக இருக்கும் மஷுர் மௌலானா நகைச்சுவையாகப் பேசுவதில் மிகவும் வல்லவராக இருந்தார். 1952ம் ஆண்டுப் பொதுத் தேர்தலிலும் 1956ம் ஆண்டினதிலும் தமிழர்களையும் முஸ்லிம்களையும் கவர்வதில் அவருடைய பேச்சுக்கட்டுப் பெரும் பயன் இருந்தது.

> **தமிழரசுக் கட்சியால் முழுமையாக தி.மு.க. பாணியில் செயல்பட முடியவில்லை.**

1956 தேர்தல் வெற்றிக்குப் பிறகு, தமிழரசுக் கட்சி, தமிழ் மக்களின் ஒரே பிரதிநிதி என்ற அந்தஸ்தை அடையும் முனைப்புடன் செயற்பட்டது. இந்தக் காலகட்டத்தில் செல்வநாயகத்துக்கு அடுத்த தலைவர் யார் என்ற கேள்வி எழவில்லை. 1958ல் இருந்த வன்னியசிங்கம் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கட்கு அப்பாற்பட்டுச் செயற்பட்ட ஒருவராகவும் அரசியற் தெளிவும் நிதானமும் மிக்க தலைவராகவும் மதிக்கப்பட்டார். அவர் தலைவர் பதவியை நாடாதவர். செல்வநாயகத்துக்கு ஆதரவாக நின்ற அதே வேளை கொள்கைப் பிடிப்புடன் கட்சி அலுவல்களை முறையாக நடைமுறைப்படுத்துவதிலும் கவனமுள்ள ஒருவராகவும் ஆழச் சிந்தித்தே உரையாற்றுகிறவராகவும் மிகவும் மதிக்கப்பட்டவராக இருந்தார். உணர்ச்சி வசப்பட்டும் தமிழ்ப் பேசத் தடுமாறியும் மேடையில் முழங்கும் ஈ.எம்.வி. நாகநாதனுக்குத் தன் மகள் சிங்களம் படித்ததை மேடையில் மறுக்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இந்தப் பொய்யை, அனேகமாகச் 'சத்தியசீலரான' செல்வநாயகத்தின் அங்கீகாரத்துடன், மேடையிற் சொல்லிவிட்டுப் பின்னர் அதற்காக அழுது கண்ணீர் விட்ட நல்லமனிதர் அவர். அவருடைய தைரியம் தமிழரசுக் கட்சித் தலைமையில் யாருக்கும் இருந்திராது. தனிப்பட்ட ஒரு பிரச்சனையாகக் கருதவேண்டிய முற்குறிப்பிட்ட பிரச்சனை தமிழ்க் காங்கிரஸ் பேச்சாளர்களால் அவருக்கு மாறாக நன்கு பயன்படுத்தப்பட்டது. எனினும் அவருடைய செல்வாக்கு 1961ம் ஆண்டுச் சத்தியாக்கிரகம் வரை ஓங்கியிருந்தது. ந.சி. இராஜவரோதயம் தமிழரசுக் கட்சி சார்பாகப் போட்டியிட்டு அதிக வாக்குக்களால் வெற்றிபெற்றுவந்த போதும் தலைமைப் பதவியை என்றுமே நாடாத ஒருவர். பொறுப்பான பாராளுமன்றவாதியாக நடந்துகொள்வதையே மிக முக்கியமாகக் கருதியவர். வெகுசனப் போராட்ட அரசியல் தமிழரசுக்கட்சிக்குப் பழக்கமில்லாத ஒன்று என்பதை அதன் தலைமையின் தன்மை மட்டுமில்லாமல் வெகுஜனக் கவர்ச்சிக்காகப் பேசிக் கனல் எழுப்பியவர்களுடைய உண்மையான வர்க்கச்சார்பும் அடையாளங் காட்டின.


செல்வநாயகத்திற்குப் பிறகு யார் என்ற கேள்வியின் வடிவில் இல்லாவிட்டாலும் செல்வநாயகத்திற்கு நெருக்கமான இளைய தலைமுறைத் தலைவர் யார் என்ற கேள்வி வன்னியசிங்கத்தின் மரணத்தின் பின்பே கட்சிக்குள் உருப்பெறத் தொடங்கியது. தமிழரசுக் கட்சி இறுக்கமான கட்டுப்பாடான ஒரு அரசியல் அமைப்பல்ல. அதை அவ்வாறு அமைப்பதற்கான ஆற்றல் செல்வநாயகத்திடம் இருந்ததாக எண்ணுவதும் கடினம். கட்சிக்குள் தங்கள் அதிகாரத்தை வலுப்படுத்துவதற்குக் கீழ் மட்டங்களில் ஏற்பட்ட போட்டிகளில் தனிமனிதப் பரிமாணங்கட்கும் மேலாகத் தமிழ்த் தேசியவாத அரசியலின் அக முரண்பாடுகளுக்கு ஒரு பெரிய பங்கு இருந்தது. கட்சியில் இருந்த உள் முரண்பாடுகளையும் தவறான போக்குக்களையும் கவனித்துத் தக்க நடவடிக்கை எடுப்பதற்கு மாறாகப் பூசி மெழுகும் போக்கே தமிழரசுக் கட்சித் தலைமையால், குறிப்பாக செல்வநாயகத்தால், கடைப்பிடிக்கப் பட்டது. இதுவே தமிழரசுக் கட்சிக்குள் ஒரு கட்சியாக ஒரு குழு வளரவும் அதன் செயற்பாடுகள் கட்சிக்குள்ளும் பின்பு அக்குழுவைச் சார்ந்தவர்கட்குள்ளும் பெரிய மோதல்களை உருவாக்கவும் பல நடைமுறைத் தவறுகட்கும் காரணமானது.

இந்தப் பின்னணியில் அமிர்தலிங்கம் ராஜதுரை முரண்பாட்டை நோக்குவது பயனுள்ளது.

**இமயவரம்பன்**

◆◆◆

### "அண்ணன் காட்டிய வழியம்மா - இது அன்பால் விளைந்த பழியம்மா"



மேற் கூறிய சினிமாப் பாட்டு, கண்ணதாசன் 1961 அளவில் இயற்றியது என நினைக்கிறேன். சி. என். அண்ணாதுரை ஈ.வெ.கி. சம்பத் கருத்து வேறுபாட்டால் சம்பத் தி.மு.க.விலிருந்து வெளியேறித் தமிழர் தேசியக் கட்சி என்ற ஒன்றை நிறுவியபோது சம்பத்துடன் வெளியேறிய கண்ணதாசன், அண்ணாதுரை, மு. கருணாநிதி பாணியில் தனது அரசியல் கோபதாபங்களைக் கூறுவதற்கும் சினிமாவைப் பயன்படுத்தினார். அண்ணாதுரையையும் தி.மு.கவில் எஞ்சியிருந்த முன்னாள் அரசியற் கூட்டாளிகளையும் ஏளனம் செய்து எழுதினார். விமர்சித்தும் எழுதினார். மேற் கூறிய பாட்டு, சம்பத் உட்பட்ட தம்பிமாருக்கு அண்ணாதுரை இழைத்த குற்றத்தைச் சுட்டிக்காட்டும் விதமாக எழுதப்பட்டது. இது பலர் அறிந்தது.

தி.மு.க. ஒரு குடும்பம் மாதிரி என்றுகூட ஒரு காலத்தில் சொன்னவர்கள் உண்டு. சொத்துச் சண்டை உட்பட நிறையச் சண்டைகள் மிகுந்த குடும்பம் அது. தனிக்குடித்தனம் போய் வேறு கட்சிக் குடும்பங்களைத் தொடங்கிய குடும்ப உறுப்பினர்களையும் நாம் அறிவோம். குடும்பங்களில் மாதிரிப் பெரியவர்கள் தங்களுக்குள் தீமானம் எடுத்து வாரிசுகளைத் தீமானிப்பதும் அங்கே நடந்திருக்கிறது. குடும்பங்களில் மாதிரிக் காசுக் கணக்குக் கேட்டால் பெரியவர்கள் கோபித்துக் கொண்டதும் உண்டு. கேட்டவர்களை வீட்டை விட்டு விரட்டியதும் உண்டு.

'நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்' என்று சொன்னவர் அண்ணாதுரையா என்று நிச்சயமில்லை. பல்கலைக் கழகங்கட்கெல்லாம் அரசியல் தலைவர்களின் பேர்களைச் சூட்டி அவற்றை மேலும் குடும்பங்கள் மாதிரி ஆக்கிவருகிறார்கள் என்றும் சொல்லலாம். ஆனால் நம்மூர் அரசியல் ஒன்றும் தமிழகத்திற்குச் சோடை போக வில்லை என்று வட்டியும் முதலுமாகச் செய்து காட்டுவதற்கு நம் தமிழ் ஈழ (முன்னாள்) விடுதலை இயக்கத் தலைவர்கள் வரிந்து கட்டிக்கொண்டு பத்தாண்டுக் காலச் சாதனை புரிந்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் அவர்கட்கு முன்னோடிகள் இல்லையா ? அவர்கட்கு இந்திய அரசாங்கத்தின் தயவில் தமிழகத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது என்பது உண்மைதான். என்றாலும் அவர்களுடைய உண்மையான வழிகாட்டிகள் ஈழத்தவர்கள் என்பதை நாம் மறந்துவிடுவது ஒரு பெரிய துரோகமாகாதா? இனி வேடிக்கையை ஒருபுறம் வைத்து விடயத்துக்கு வருவோம்.

தமிழரசும் கட்சியின் அரசியலின் தொடர்ச்சியாகவே தமிழீழ விடுதலை இயக்கத் தலைமைகள் பலவற்றின் அரசியலைக் காணமுடியும் என்பது போலவே தமிழரசுக் கட்சியின் சீரழிவின் தொடர்ச்சியையும் தமிழீழ விடுதலை இயக்கங்களின் சீரழிவில் அடையாளங்காணமுடியும். இந்த இயக்கத் தலைமைகளை அறிய அவர்கள் அரசியல் முன்னோடிகளை அறிவதும் அவசியமானது.

'தந்தையும் மைந்தரும்' என்ற தொடரில் தமிழரசுக்கட்சியின் சரிவு வரையிலான காலத்தின் வரலாறு மதிப்பிடப்பட்டது. அதன் சீரழிவின் தொடர்ச்சி தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி அல்லது தமிழர் விடுதலைக் கூட்டணி என்று அறியப்படும் அமைப்பினூடாக மேலும் உக்கிரமானது. இச் சீரழிவுக் காலத்தின் நாயகனாக விளங்கியவர் அ. அமிர்தலிங்கம். அவர் 'அண்ணன் அமிர்தலிங்கம்' என்று செல்லமாக அழைக்கப்பட்டவருங்கூட. அவர் தலைமைக்கு வந்த கதையும் அவரது தலைமையின் கீழ் கூட்டணியின் அரசியல் போன திசையையும் இனி வரும் அத்தியாயங்களிற் கவனிப்போம்.

'தந்தையும் மைந்தரும்' எஸ். ஜே. வி. செல்வநாயகம் பற்றிய தனிப்பட்ட விமர்சனம் அல்ல. அது அவரது தலைமையின் கீழான ஒரு கட்சியின் போக்குப் பற்றிய விமர்சனமே. செல்வநாயகம் பற்றிக் கட்டியெழுப்பப்பட்ட பிரமைகளைக் கலைக்கும் அவசியம் கட்சி அரசியலுக்கும் அப்பாற்பட்டது. செல்வநாயகம் பற்றிய மயக்கங்களை வைத்து இன்னமும் தமிழர்களை ஏமாற்றும் முயற்சி தொடர்கிறது. "சாதியத்தை ஒழித்தவர் தந்தை செல்வா" என்கிற மாதிரியான புதிய புனைவுகளும் உலா வருகின்றன. இவற்றைப்போல இன்னும் பல வரலாம். அதற்கு ஆப்பு வைப்பது ஒரு அரசியல் விமர்சகனது கடமை. எனவே 'தந்தையும் மைந்தனும்' குறி வைத்தது செல்வநாயகத்தையல்ல, செல்வநாயம் பற்றிய பொய்யான படிமங்களையும் தமிழ்த் தேசிய வரலாற்றுப் புனைவுகளையுமே.

அமிர்தலிங்கத்தின் மரணத்தின் பின்பு படிப்படியாக அவரது அரசியல் ரட்சிப்பு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. அவரது கொலையின் பத்தாமாண்டு நிறைவையொட்டிப் பாவங்கள் கழுவப்பட்ட ஒரு புனிதராக அவர் நம்முன் வைக்கப் பட்டதையும் நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும். அவர் துரோகி என்ற குற்றச்சாட்டோ அது பற்றிய விசாரனையோ பயனுள்ள முடிவுகட்கு வர உதவா. அவரது துரோகங்களாகக் காணப்பட்டவற்றை முற்றிலும் ஒரு வகையான அரசியற் போக்கின் விளைவுகளாக நாம் அடையாளங் காட்ட முடியாது. என்றாலும் பொதுப்பட நோக்கினால், ஒரு தலைவரின் தனிமனிதக் குணாம்சங்களை விட அதிகமாக அரசியற் சிந்தனையும் அணுகுமுறையும் ஒரு கட்சியின் அரசியல் நடத்தையை நிருணயிக்கின்றன என்று காணலாம். எனவே, இத் தொடரும் தனிப்பட்ட முறையில் அவர் மீதுமான விமர்சனமாக இல்லாமல் அரசியற் போக்குக்கள் மீதான விமர்சனமாகவே அமையும். சில தனிமனிதச் செயல்களும் தனிமனிதர்களிடையிலான முரண்பாடுகளும் அரசியற் போக்குகளைப் பாதிக்குமிடத்து அவற்றை வலிந்து புறக்கணிக்கக் கூடாது என்பதையும் கருத்திற் கொண்டு கட்டுரைத் தொடரைத் தொடக்குகிறேன்.

ΩΩΩ

*இமயவரம்பன்*

நன்றி - நூலகத்திட்டம்



# முதலாளியத்தின் மறுபக்கம்

**தமிழ் வடிவம் : இ. முருகையன்**

மனிதகுல வரலாறு துன்ப துயரங்கள் நிரம்பியுள்ளது. இது தான் இயல்பு என்றால், இப்படிப்பட்ட வாழ்க்கையால் என்ன பயன் ? விசிலை ஊதி விளையாட்டை முடித்து விட்டால் என்ன? வரலாற்றுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விடலாமே ! இப்படித்தான் ஷொப்பணோவர் கருதினார். இது நடக்க முடியாத ஒரு கற்பனைத் தீர்வு. ஆனால், பின்னவீனத்துவம் இப்படி எல்லாம் யோசிக்க மாட்டாது. வரலாறு கடந்த 'உண்மைகள்' பற்றி அதற்கு அக்கறை இல்லை. ஏனென்றால், பின்னவீனர்களுக்கு வரலாறு என்று ஒரு பண்டமே கிடையாது.

அது ஒரு புறமாக, வரலாறு திருந்திச் சிறக்கும் என நாம் நம்பிக்கை கொள்ள வேண்டுமானால், அறங்களுக்குப் புறம்பான வழிகளில் அத்திருத்தம் நடந்தேறுமோ என்றும் நினைத்துப் பார்க்கலாம். எடுத்துக்காட்டாக, பொருள் மயமான சூழல்கள் தான் முடியாத பூசல்களின் ஏதுவாக உள்ளன. அவற்றின் விளைவாகத் தான் ஒடுக்குமுறை அரசுகள் தொடர்ந்து கொண்டு இருக்கின்றன. என்று கருதலாம். ஆனால், இவ்விதமான கருத்து ஒரு சர்வரோக நிவாரணி ஆக முடியாது. பொருள்மயமான சூழல்களை மாற்றியவுடன் எல்லாரும் நல்லவர்களாகி விடுவார்கள் என்பதுமில்லை. எல்லாத் தீமைகளும் பொருள்மய ஏதுக்களாலேதான் தோன்றுகின்றன என்பதும் இல்லை.

இன்று வரை வரலாறானது ஏதோ ஒரு வகையிலே கடுமுனைப்பான சூழல்களின் தொகுதியாகவே இருந்து வருகிறது; வன்செயல்களும் பிணக்குகளும் நிரம்பியதாய் அது உள்ளது. வறுமையில் உழல்கிறவர்களுக்கு இது நல்லாய்த் தெரியும். உடைமையாளர்களுக்கு இது விளங்காது. அதே வேளை, வறியவர்கள் இழிவும், சுரண்டலுமற்ற இயல்பான நிலைமை எப்படி இருக்கும் என்று கற்பனை செய்யவே முடியாது. என்றாலும் அநீதியை ஒழிக்க வேண்டும் என்ற விளக்கமும் விழிப்பும் ஏற்கெனவே நிலவும் வரலாற்றுச் சுழலிருந்து தான் கிளம்பியாக வேண்டும்.

அவை வானத்திலிருந்து குதிக்க முடியாது. இயங்கியல் அல்லது முரண் கொண்ட வரலாற்று நிலை என்று மாக்சியம் விளக்கும் கருத்துகளில் ஒன்று இதுதான்.

வரலாற்றில் முரண்கள் உண்டு என்று வலியுறுத்தும் மாக்சியர்களை, முன்னேற்றத்தின் மீது பக்தி பாராட்டும் குருட்டுக் கூட்டம் என்று பின்னவீனத்துவம் பழிப்பதுண்டு. இது அபத்தமானது. வரலாறு முன்னேறிச் செல்கிறதா, சீரழிந்து கெடுகிறதா என்று கேட்டால், இரு கட்சிகளுக்கும் சார்பாகவும் எதிராகவும் வலிமையான நியாயங்கள் பலவற்றைத் தேடுவது ஒன்றும் சிரமமல்ல. ஆனால், உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியுடன் கைகோர்த்தபடி பீடு நடை போடும் ஒரு போக்கு வரலாற்றுக்கு உண்டு என்ற மாக்சியக் கருத்தியல் வேறொரு வகையைச் சார்ந்தது.

உண்மையில், தேக்கத்தைக் காட்டிலும் வளர்ச்சி தான் வரலாற்றின் பொதுவான போக்கு என்று மாக்ஸ் நம்பவில்லை. மாறாக, தேக்கம் தான் பொதுவான போக்கு என்று அவர் எண்ணியதாகத் தெரிகிறது. மாக்சியம் என்பது ஒரு வகை விதிவாதம் அல்ல. எடுத்துக்காட்டாக, வரலாற்றில் இடம்பெறும் பல்வேறு உற்பத்தி முறைகள் எந்திரப் பாங்காக இன்ன இன்ன வரிசைப்படி தான் விருத்தியாகும் என்று மாக்சியம் விதிக்க வில்லை.

எனவே, வரலாற்றின் பொதுப் போக்குப்பற்றிய கருத்தைப் பொறுத்தவரை, மாக்சியத்துக்கும் பின்னவீனத்து வத்துக்குமிடையே அதிக வித்தியாசமில்லை. நவீன காலம் எந்த அளவுக்கு முற்போக்கானது என்பதிலே தான் சிக்கல். சில தீவிரமான பின்னவீனத்துவங்கள், மேலாண்மை மிக்க அமைப்புகள் எல்லாமே, ஒடுக்குமுறைப் பாங்கானவை என்று கருதுகின்றன. இருமுனைச் சிந்தனை என்று பின்னவீனர்களே கண்டிக்கும் போக்குக்கு, இது நல்ல உதாரணம். அதிகாரம், நிறுவனம், சட்டம், கருத்திணக்கம், நியமப்பாடு ஆகிய யாவும் எப்போதுமே கெட்டவை என்று அவர்கள் நம்ப விரும்புகின்றனர். சில பின்னவீனர்களின் தத்துவம் சற்றுத் தாராளமாய் இருக்கலாம். ஆனால், பின்னவீனத்துவத்தின் பொதுவான உள்ளுந்துதல்களும் உணர்ச்சிப் பழக்கங்களும் நியமம், சட்டம் அதிகாரம், வலு என்னும் சொற்களைக் கூட, உள்ளூர வெறுக்கின்றன.

> வர்க்கத்தைக் கண்டுபிடித்த வர்கள் மார்க்சும் ஏங்கல்சும் அல்ல. சமூக வர்க்கங்களின் தோற்றமும் அழிவும் அவற்றிடையேயான போராட்டமும் பொருளுற்பத்தியின் வரலாற்று வழியட்ட முன்னேற்றத்துடன் பின்னிப் பணைந்துள்ளன என்பதுதான் மார்க்சும் ஏங்கல்சும் கண்டறிந்து கூறிய உண்மை. வர்க்க அமைப்பில் இன்றுள்ள ஒடுக்குமுறைப் போக்குகளைக் கண்டிப்பதுடன் நின்ற விடும் அறிஞர்களும் மார்க்சிய முதல்வர்களும் வேறுபடுவது இந்த இடத்திலேதான். வரலாற்று மாற்றங்களின் 'இயங்குதிறன்' பற்றிப் பேசுவது தான் மாக்சியம்

உண்மையில், அதிகாரம், வலு என்பன மிகவும் நல்லவை மிடிமையையும் ஏழ்மையையும் ஒழித்துவிடும் அதிகாரம் மிகவும் நல்லது. நியமம் என்பது 'பெண்ணடிமை' ஆக இருந்தால், அது தீயது; சில நிலைமைகளில் உழைப்பினை விலக்கிக் கொள்வதற்குத் தொழிலாளர் கொண்டுள்ள உரிமையை 'நியமம்' என்று ஏற்றுக்கொண்டால், அந்த நியமம் நல்லது.

தீங்கு பயக்கும் அதிகாரங்களைக் கண்டு வெறுக்கும் பின்னவீனத்துவம் எல்லா அதிகாரங்களையும் வெறுக்கத் தலைப்படுகிறது. ஆணாதிக்கமும் இன ஆதிக்கமும் ஒரு போதும் நல்லவை அல்ல. அதே போல வர்க்க உணர்வும் நல்லதல்ல என்று பின்னவீனத்துவம் கருதுகிறது. வர்க்கம்-இனம்-பால் என்ற முக்கூட்டிலுள்ள 'முப்பொருள்களில்' ஒன்றாக, வர்க்கம் என்பதைப் பின்னவீனத்துவம் காண்கிறது. மேலோட்டமாகப் பார்க்கும்போது இந்த முப்பொருள் வரிசை சரியானது போலவே தோன்றும். வர்க்கம்-இனம்-பால் ஆகிய மூன்றின் பேராலும் ஒடுக்குமுறைச் செயல்கள் முடுக்கி விடப்படுவது மெய்தான். ஆனால், இவை மூன்றையும் ஒன்றாகக் கட்டிப் போடும் 'முப்பொருட்' கருத்தாக்கம், தவறான நிலைப்பாட்டுக்கு நம்மை இட்டுச் செல்கிறது. தனியாட்கள் ஒடுக்கலுக்கு உள்ளாவது அவர்கள் ஒரு குறித்த வர்க்கத்தைச் சார்ந்திருப்பதன் பலனாக அல்ல. ஒடுக்கப் படுவதன் விளைவாகத்தான், ஒடுக்கப்படும் வர்க்கத்தினராக அவர்கள் அமைகிறார்கள். இதைத் தான் மாக்சியம் சொல்லுகிறது. இந்த வகையிலே, வர்க்கம் என்பது ஒரு சமூக வகுப்பாக்கம். ஆனால், ஒரு பெண்ணாக இருப்பதோ, வித்தியாசமான நிறமுடையவராக இருப்பதோ அப்படியான சமூக ஏதுக்களால் விளைவதல்ல. அவ்வேறுபாடுகள் பிறப்பினால் அமைவன. என்ன இருந்தாலும் மாக்சியம் வர்க்கவாதம் அல்ல. வர்க்கத்தைக் கண்டுபிடித்தவர்கள் மாக்சும் ஏங்கல்சும் அல்ல. சமூக வர்க்கங்களின் தோற்றமும் அழிவும் அவற்றிடையேயான போராட்டமும் பொருளுற்பத்தியின் வரலாற்று வழிப்பட்ட முன்னேற்றத்துடன் பின்னிப் பிணைந்துள்ளன என்பது தான் மாக்சும் ஏங்கல்சும் கண்டறிந்து கூறிய உண்மை. வர்க்க அமைப்பில் இன்றுள்ள ஒடுக்கு முறைப் போக்குகளைக் கண்டிப்பதுடன் நின்று விடும் 'அறிஞர்களும்', மாக்சிய முதல்வர்களும் வேறுபடுவது இந்த இடத்திலேதான். வரலாற்று மாற்றங்களில் வர்க்க முரண்களின் 'இயக்குதிறன்' பற்றிப் பேசுவதுதான் மாக்சியம். இந்த வகையிலே சமூக வர்க்க உணர்வு தன்னளவிலே தீயதல்ல. ஆணாதிக்கம் இன ஆதிக்கம் என்பவற்றோடு வர்க்க நிலைப்பாட்டையும் கட்டிப் போட்டுவிட முடியாது.

வர்க்கம் - இனம் - பால் என்ற முப்பொருட் பிணைப்பினால், மற்றுமொரு பிழையான எண்ணம் தூண்டப்படுகிறது. இன்றைய நிலையில் வர்க்க அடிப்படையிலும் இன அடிப்படையிலும் பால் அடிப்படையிலும் . பலர் முழு மனிதர்களாக மதிக்கப்படாது தாழ்த்தப்பட்டுள்ளனர். அதனால் அரசியல் முன்னேற்றத்தை வென்றெடுப்பதில், பாட்டாளி வர்க்கம், தாழ்த்தப்படும் இனம், பெண்கள் ஆகிய மூன்று தரப்பாரும் ஒரே விதமான பங்களிப்பைச் செய்யலாமே என்று சிலர் கருதுகின்றனர். இந்த மூன்று தரப்பினருள் எந்தத் தரப்பினரை ஊக்கப்படுத்தினால் நற்பலன் ஏற்படும் என்று யோசிப்பது சரியல்ல. ஒவ்வொரு குழுவும் தன் தன் விடுதலைக்குத்தான் தானே பாடுபட வேண்டும். பொருளுற்பத்தித்துறையில் மீட்சி கிடைக்க வேண்டுமானால், பாட்டாளி வர்க்கம் தான் கிளர்ந்து எழ வேண்டும். புதிய அரசியல் இயக்கங்களின் எழுச்சியினால், பாட்டாளி வர்க்கத்தின் முதன்மை அற்றுப் போய் விட்டது என்று சில பின்னவீனர்கள் எண்ணுவது கருத்தற்றது.

சமூக வர்க்கம் பற்றிய பார்வையில், சமதருமிகள் நெகிழ்ச்சி அற்றவர்கள் என்று சிலர் சொல்வதுண்டு. இது உண்மை அல்ல மாக்சியர்கள் முதலாளியத்தின் தீமைகளைப் போலவே நன்மைகளையும் சீர் தூக்கிப் பார்க்கிறார்கள். நடைமுறை அனுபவத்தின்படி நன்மை - தீமைகளை நிறுத்துப் பார்த்துத் தீர்ப்புச் சொல்வதல்ல முக்கியம், முதலாளியத்தின் வரலாற்றுப் பாத்திரம் எப்படிப்பட்டது என்று விளங்கிக் கொள்ள வேண்டும். முதலாளியம் முற்போக்கானதா ? 'ஆம்; அத்துடன் இல்லை' என்று சொல்வது தான் நியாயமான மறுமொழி. முதலாளியம் உயிர்ப்பு மிக்க, புரட்சிகரமான, செயலூக்கம் நிரம்பிய சமூக அமைப்பு; அது தடைகளைக் கரைத்து எதிர்ப்புகளை நொறுக்கி, பல்வித வாழ்முறைகளையும் கலவி செய்து வேட்கை வெள்ளத்தை மடையுடைத்துப் பாயச் செய்கிறது.

அளவற்ற வளத்தையும் செழிப்பையும் பெருக்கியுள்ளது. உற்பத்தி வலுவினை முன்னெப்பொழுதும் இல்லாத அளவு மிகுவித்து, துண்ணிய பன்மைப்பாட்டின் சிகரங்களையும் எட்டியுள்ளது. உலககளாவிய முதலாவது உற்பத்தி முறை என்ற முறையில், குறுகிய எல்லைகளை ஒழித்து, பரந்த மானுடப் பொதுமைக்கு வழி வகுத்துள்ளது. சுதந்திரம், நீதி, சுயநிருணயம், சமவாய்ப்பு என்னும் (பூசுவா) இலட்சியங்கள், கருத்தளவிலாயினும் புதுமையானவை; ஆழமானவை; மனிதப் பண்பில் வேர் ஊன்றியவை. இவை எல்லாம் மெய்தான்.

ஆனால், இவை யாவும் மிகவும் கொடூரமான விலை கொடுத்துப் பெறப்பட்டவை. இவற்றோடு கூட, மிக மூர்க்கமான அவலங்களும் நேர்ந்துள்ளன. அதிகாரங்கள் முடமாக்கப்பட்டுள்ளன. உயிர்கள் ஒழிக்கப்பட்டுள்ளன. மிகச் சிலரின் நன்மைக்காக மிகப்பலரின் கடும் உழைப்புச் செலவழிக்கப்பட்டுள்ளது. முதலாளியம் முற்போக்கானதாயினும் அது படுபயங்கரமானது. அது மாறாவடிவம் கொண்டது போலத் தன்னைக் காட்டிக் கொண்டாலும், அளவு கடந்த பேராசைகளைத் திரட்டி எடுத்து, பூசல்களும் புரட்டல்களும் மீறல்களும் கும்மாளி போடும் நிலைமையைத் தோற்றுவித்துக் கொண்டே இருக்கிறது.

இது தான் முதலாளியத்தின் கோரமான மறுபக்கம்.

(ஆதாரம் : 'தெரி ஈகிள்ற்றன்' எழுதிய 'த இலூஷன்ஸ் ஒ.்.வ் போஸ்ற மொடேணிஸ்ம்')



## வர்க்கப் போராட்டப் பாதையில்...

வரலாற்றில் வர்க்கங்களும் அவற்றுக்கு இடையிலான போராட்டங்களும் இருந்து வந்துள்ளமை பற்றி மார்க்ஸ்-ஏங்கல்சுக்கு முன்பே தத்துவவாதிகள் எடுத்துக் கூறியுள்ளனர். அத்தகையவர்களால் வர்க்கப் போராட்டத்திற்கு இருந்து வந்த சமூக விஞ்ஞான அடிப்படையைக் கண்டு கொள்ள இயலவில்லை. ஆனால் மார்க்சும் ஏங்கல்சும் தான் வர்க்கப் போராட்டத்திற்கு அடிப்படையாக அமைந்த தனிச் சொத்துடமை பற்றியும் பொருள் உற்பத்தி முறைமையின் வளர்ச்சி பற்றியும் விஞ்ஞான பூர்வமாகக் கண்டறிந்தனர். எனவே வர்க்கப் போராட்டம் என்பது சமூக இயங்கு சக்தியாக இருந்து வந்துள்ளமையை வரலாற்றுப் பொருள் முதல் வாதத்தின் ஊடாக அவர்கள் விளக்கி வைத்தினர். விளக்கம் மட்டுமன்றி வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சியானது எவ்வாறு மனித குல வரலாற்றில் சமூக அமைப்புகளின் மாற்றத்திற்கான மைய விசையாக இருந்து வந்துள்ளமையை இயங்கியல் பார்வையின் மூலமாக எடுத்துக் காட்டினர்.

இத்தகைய வர்க்கப் போராட்டம் முதலாளித்துவ தனிச் சொத்துடமை கொண்ட பொருள் உற்பத்தி முறைமையின் கீழ் எத்தகைய வளர்ச்சியையும் வடிவத்தையும் பெற்றுள்ளது என்பதையும் மார்க்சிச ஆசான்கள் விஞ்ஞான பூர்வமாக விளக்கி சென்றனர். முதலாளித்துவக் கூலி அடிமை முறையின் கீழ் ஆகக் கூடுதலாகச் சுரண்டி ஒடுக்கப்படும் பாட்டாளி வர்க்கம் இவ் வர்க்கப் போராட்டத்தில் இறுதி நிலையாக முதலாளித்துவத்தை புரட்சிகரப் பலாத்காரத்தின் மூலம் தோற்கடித்து வீழ்த்தி அந்த இடத்தில் தனது தலைமையின் கீழ் சோஷலிசத்தை நிலை நிறுத்தி அதனை ஒரு சமூக அமைப்பாக்கிக் கொள்ளும் எனக் கண்டனர். இச் சோஷலிச அமைப்பானது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ஊடாகக் குறிப்பிட்ட காலப் பகுதியைக் கடந்து கம்யூனிச சமூகத்தைச் சென்றடையும் என மார்க்சும் ஏங்கல்சும் பாட்டாளி வர்க்கத்திற்குப் போதித்துச் சென்றனர். இவ் விடத்திலே தோழர் லெனின் வர்க்கப் போராட்டம் பற்றிக் கூறிய ஒரு விடயம் கவனத்திற்குரியதாகும். 'வர்க்கப் போராட்டத்தை ஏற்றுக் கொள்பவர் மட்டும் ஒரு மார்க்சிச வாதியாக இருந்து விட முடியாது. அத்துடன் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஏற்றுக் கொள்ளும் ஒருவராலேயே உண்மையான மார்க்சிசவாதியாக இருக்க முடியும்.' என்றார். இங்கேதான் வர்க்கப் போராட்டத்தின் சாராம்சம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இதனை முதலாளித்துவமும் ஏகாதிபத்தியமும் நன்குணர்ந்து கொண்டமையினாலேயே ஒவ்வொரு கால கட்டத்திலும் விதம் விதமான கருத்தியல்களைத் தோற்றுவித்து வர்க்கப் போராட்டம் பற்றிய மார்க்சிசத் தத்துவார்த்தக் கருத்தியல்களைச் சிதைப்பதற்கும் தோற்கடிப்பதற்கும் முயன்று வந்துள்ளன. ஆன்மீக மதக் கருத்துக்கள் முதல் இன்றைய பின் நவீனத்துவக் கருத்தியல்கள் வரை அனைத்தும் வர்க்கப் போராட்டத்தின் மீது தொடுக்கப்பட்ட கணைகளேயாகும். ஒடுக்கு முறைகளுக்கு உள்ளான மக்கள் பிரிவினர் தமக்குரிய போர் ஆயுதம் வர்க்கப் போராட்டத்தை மையமாகக் கொண்ட மார்க்சிசம்தான் என்பதை உணர்ந்து அதனை நோக்கி அணி திரள்வதைத் தடுப்பதற்கே இன்று பின் நவீனத்துவக்கருத்தியல்கள் பரப்பப் படுகின்றன. பல்வேறு வகையான ஒடுக்கு முறைகளைத் தனித் தனித் தளங்களிலானவை எனப் பிரித்து தனிமைப்படுத்தி சிதைவுறச் செய்கின்றனர். இதன் மூலம் வர்க்கப் போராட்டப்பாதையில் அனைத்து ஒடுக்குமுறைகளையும் தகர்ப்பது சமூக அமைப்பு மாற்றியமைக்கப்படுவது புதிய சமூக அமைப்பு தோற்றுவிக்கப் படுவது போன்ற நோக்கிலிருந்து மக்களைத் திசை திருப்புவதில் பின் நவீனத்துவக் கருத்தியல்கள் முனைப்புடன் முன் தள்ளப்படுகின்றன. இவற்றை அரசு சார்பற்ற நிறுவனங்கள் என்பன தாராள நிதி வளங்களுடன் செயல் திட்டங்களாக முன்னெடுத்தும் வருகின்றன. அவை அடிப்படையில் முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகளினால் அவர்களது இருப்பிற்காக முன்னெடுக்கப்படுகின்றன.

இவற்றை முறியடித்து மார்க்சிசம் வற்புறுத்தி வழிகாட்டும் வர்க்கப் போராட்ட அடிப்படையில் ஒடுக்குமுறைகளுக்கு உள்ளான அனைத்து மக்களும் தமக்குரிய விடுதலைக்கான பாதையில் சிந்தித்து செயல்பட முன்வருதல் வேண்டும். மார்க்சிச அடிப்படையில் ஒடுக்கு முறைகளை அடையாளம் காண்பதும் அவற்றை வர்க்கப் போராட்டப் பாதையில் அணி திரட்டிக் கொள்வதும் இன்றைய தேவையாகும். அதற்கான அரசியல் கல்வியையும் அரசியல் போராட்டங்களை முன்னெடுப்பதும் அவசியமாகும். ஒடுக்கு முறைகளைப் பல்வேறு தளங்களில் அனுபவித்து வரும் மக்களும் குறிப்பாக இளம் தலைமுறையினரும் அவற்றுக்கான அடிவேர்கள் எங்கே நிலை கொண்டுள்ளன என்பதை வர்க்கப் போராட்ட ஒளி பாச்சலின் ஊடாகக் கண்டு கொள்ள முன் வர்ல் வேண்டும்.

நன்றி - நூலகத்திட்டம்



# அமெரிக்க - இந்திய நாடுகளின் உறவும் உள்நோக்கமும்

அமெரிக்கா சோவியத் யூனியனின் சிதைவுடன் முடிவுக்கு வந்துகொண்ட பனிப் போருக்கு பின் இந்தியாவை நோக்கி தனது முழுக் கவனத்தையும் திருப்பி வந்துள்ளது. சோவியத் யூனியனின் மிக நெருங்கிய நட்பு நாடாக இருந்த இந்தியாவை எவ்வாறு தனது அரவணைப்பிற்குள் மறைமுகப் பிடிகளுக்குள் கொண்டு வருவது என்பதில் வாஷிங்டன் சுறுசுறுப்பாக இயங்கி வந்துள்ளது. அதற்கு ஏற்றால் போல் தனது தென்ஆசியக் கொள்கையையும் குறிப்பாக பாகிஸ்தானுடனான நெருக்கத்தையும் தளர்த்தி இந்திய சார்பு போன்ற தோற்றத்தையும் காட்டி வந்துள்ளது. இது ஒரு சில மாதங்களுக்கு முன்பு இடம்பெற்ற காஷ்மீர் முகடுகளிலான கார்கில் யுத்தத்தின் போது வெளிப்பட்டது. அதன் தொடர்ச்சியே அதிபர் பில் கிளின்டனின் இந்திய விஜயமாகும்.

இந்தியாவுடன் அமெரிக்காவிற்கு இன்னும் பல விடயங்களில் முரண்பாடுகள் உண்டு. அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் இந்தியா இன்னும் கைச்சாத்திடவில்லை. காஷ்மீர் பிரச்சினையில் அமெரிக்க மத்தியஸ்த்தை இந்தியா தொடர்ந்து நிராகரித்து வருகின்றது. உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றின் ஆலோசனைகள் முழுவதையும் மக்கள் எதிர்ப்புக் காரணமாக இந்தியா நிறைவேற்ற முடியாது உள்ளது. பாகிஸ்தானுக்கு ஆயுதங்களும் யுத்த விமானங்கள் யுத்தக் கலங்கள் விற்பதில் அமெரிக்கா பின் வாங்கவில்லை. தற்போது இலங்கையின் உள் நாட்டு யுத்த நிலைமையில் அமெரிக்காவின் ஊடுருவும் செல்வாக்கு பற்றியும் இந்தியாவிற்கு அதிகரித்த ஆதங்கம் உண்டு. இவை அனைத்தின் மத்தியிலேயே கிளின்டன் இந்தியா வந்து சென்றிருக்கிறார்.

இருந்தபோதிலும் இந்தியாவின் பொருளாதாரக் கொள்கை வகுப்பாளர்கள் அமெரிக்காவின் பூகோளமயத் திட்டத்திற்கு இணங்கிப் போகும் போக்கையே பாரதிய ஜனதா ஆட்சி மூலம் விரைவு படுத்துகிறார்கள். இந்தப் போக்கு ஏற்கனவே நரசிம்மராவ் காலத்து காங்கிரஸ் ஆட்சியில் ஆரம்பித்துவிட்ட ஒன்றாகும். திறந்த பொருளாதாரமும் தனியார் துறையும் என்னும் போட்டிச் சந்தை முறைமை இந்தியாவை ஆக்கிரமிக்க ஆரம்பித்து விட்டது. இந்தியா போன்ற நாடு ஒன்றின் வளங்களும் சந்தைவாய்ப்பும் அமெரிக்காவிற்கும் ஏனைய மேற்குலக யப்பானிய ஏகபோக முதலாளித்துவ மூலதனத்திற்கும் மிக மிக அவசியமாகின்றது. இத்தகைய ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு இந்தியா தனது வளங்களையும் மக்களையும் இரையாக்கப் போகின்றதா? அன்று கொலனித்துவத்தை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்ற மக்களை இன்று புதிய ஏகாதியத்திய நிகழ்ச்சி மூலமான நவகொனித்துவத்திடம் இந்திய ஆளும் வர்க்கம் தாரைவார்த்துக் கொடுக்கப் போகின்றதா ?

அதேவேளை இந்தியா தென்ஆசியப் பிராந்தியத்தில் தனது பிராந்திய மேலாதிக்கத்தை விஸ்தரித்து நிலை நாட்ட முற்படுகிறது. அதன் ராணுவ பொருளாதார ஆதிக்கம் குறைவானதொன்றல்ல. பாகிஸ்தானுடனான ராணுவ மோதல் முழுத் தென்னாசிய நாடுகளுக்கும் ஒரு எச்சரிக்கை. அதேபோன்று இந்திய இலங்கை வர்த்தக உடன்படிக்கை பொருளாதார ஆதிக்கத்தின் வெளிப்பாடாகும். ஆதலால் அமெரிக்கா இந்தியா இரண்டுக்குமிடையிலான உறவு என்பது உலக - பிராந்திய மேலாதிக்க நோக்கங்களுக்கும் இடயிலான இணைவும் போராட்டமும் ஆகும். இவற்றில் ஒத்திசைவும் உண்டு. முரண்பாடும் உண்டு. ஆனால் பரந்து பட்ட இந்திய மக்களின் நலன்கள் அனைத்திற்கும் அமெரிக்காவும் இந்திய ஆளும் வர்க்கமும் எதிரான வகையிலேயே செயல் பட்டு வருகின்றன என்பதில் ஐயமில்லை.

முத்து.

# தமிழ் பேசும் மக்களின் திண்டாட்டம்

இன்று ஒரு முக்கியத் தேவையாகவும் தொண்ணூறு வீத மக்களின் பாவனையில் உள்ளதுமான மின்சாரம் இன்றியமையாத ஒன்றாகிவிட்டது. அதை அடுத்து இன்று வேகமாய் மக்களால் பாவிக்கப்பட்டு வரும் ஒன்று என்றால் அது தொலைபேசிதான். ஆகவே இந்த இரு முக்கிய பாவனைகளிலும் பல பிரச்சினைகளை மக்கள் எதிர் நோக்க வேண்டியிருக்கிறது. ஆகவே அப்பிரச்சினைகளுக்கு உள்ளாகுவது சிங்கள மக்கள் மட்டுமல்ல தமிழ் பேசுகின்ற சிறுபான்மையினரும்தான்.

புத்தளம் மின்சார தொலைபேசி பிர[illegible]னைகளுக்கு புத்தள மக்கள் நா[illegible]ண்டியிருப்பது சிலாபத்தையே. ஆ[illegible] அங்கே பெரும் குல[illegible]கவும் பிரச்சினையாகவும் இரு[illegible] மின்சார சபையிலோ டெலிகொம் நிறுவனத்திலோ ஒரு தமிழ் பேசும் ஊழியர் இல்லாமல் இருப்பதேயாகும். இதனால் சிங்களமொழி தெரியாத தமிழ் பேசும் சிறுபான்மையினர் தம்பிரச்சினைகளை எடுத்துக் கூற முடியாது பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி உள்ளனர். பெயருக்கு கமிம் உக்கியோக மொமி என்று கூறப்படுகிறது. ஆனால் இங்கே யாவும் சிங்கள மொழியில் தான் செய்யப்பட்டுகின்றன.

இதற்கு முன்னர் புத்தளம் மின்சார சபையில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சிலாபத்திலிருந்து ஒரு பெண் ஊழியர் சமூகமளித்து பிரச்சினைகளை கேட்டு நிறைவேற்றி வந்தார். இவர் சிலாபத்திலும் பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இது மக்களுக்கு மிகவும் உதவியாக இருந்து வந்தது. அந்த தமிழ் பேசும் ஊழியரை கொழும்புக்கு இடமாற்றம் செய்திருப்பதுதான் தமிழ் பேசும் மக்களின் சிரமத்துக்கு காரணமாகி விட்டது.

இங்கே படித்து விட்டு பலநூறு பேர் வேலையின்றி தவிக்கின்றனர். இவர்களில் எத்தனையோ பேர் தமிழ் பேசும் மக்கள். இருக்கின்றனர். அவர்களில் சிலரை வேலைக்கமர்த்துவதன் மூலம் இப்பிரச்சினையை தீர்த்து வைக்க முடியும். ஆனால் இதுபற்றி பாராளுமன்ற உறுப்பினர் முதல் பிரதேச சபையினர் வரை யாருமே அக்கறைப்படுவதாகத் தெரிய வில்லை.

ஆகவே இந்த விடயத்தில் சம்மந்தப்பட்ட வர்கள் அக்கறையுடன் செயல்படுமாறு தமிழ் மக்கள் சார்பில் அன்பாய் கேட்டுக் கொள்கிறேன்.

***கே. நாகேந்திரன்***
புத்தளம்.

# பேச்சுவார்த்தையும் மூன்றாம் தரப்பு அனுசரணையும்

அரசாங்கமும் விடுதலைப் புலிகள் இயக்கமும் நோர்வே நாட்டின் அனுசரணையுடன் பேச்சுவார்த்தை நடாத்த முன் வந்துள்ளமையும் அதற்கான ஆரம்ப முயற்சிகள் எடுக்கப்படுவதும் வரவேற்கப்பட வேண்டியதாகும். இது சுயநிர்ணய உரிமைக்காகப் போராடி வரும் தமிழ் மக்களுக்கும், அவர்களது போராட்டத்தை ஆதரித்து யுத்தம் - இனவாதத்தை எதிர்த்து நியாயமான அரசியல் தீர்வை வற்புறுத்தி வரும் சிங்கள, முஸ்லீம், மலையக மக்களுக்கும் ஏற்பட்டுள்ள ஒரு சாதகமான புதிய சூழலாகும். வெளிநாட்டு மத்தியஸ்தம் அல்லது அனுசரணை என்னும் விடயத்தில் எமது கட்சிக்கு அடிப்படைக் கருத்து நிலை ஒன்று உண்டு. இருப்பினும் இன்றைய சூழலில் மூன்றாம் தரப்பு அனுசரணை ஒன்றின் தேவையை நிராகரிக்க முடியாதுள்ளது. எனவே முன் முயற்சி எடுக்கப்பட்டு வரும் மூன்றாம் தரப்பு அனுசரணையுடனான பேச்சுவார்த்தையை எமது புதிய ஜனநாயக கட்சி வரவேற்கின்றது. அத்துடன் இப் பேச்சுவார்த்தைக்கு சகல தரப்பினரும் தத்தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்பதே நமது நிலைப்பாடாகும்.

இவ்வாறு இனப் பிரச்சினைக்கான பேச்சுவார்த்தை பற்றி எழுந்துள்ள புதிய நிலைமையை ஆராய்ந்த புதிய ஜனநாயக கட்சியின் அரசியல் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

என்னும் உண்மையை ஏற்றுக் கொள்வது அல்லது மறுப்பது என்பதிலிருந்தே புலிகள் இயக்கம் பற்றிய நிலைப்பாட்டை ஒவ்வொருவராலும் வரையறுத்துக் கொள்ள இயலும். எவர் விரும்பினாலும் விரும்பாது விட்டாலும் புலிகள் இயக்கம் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கான போராட்ட சக்தியாகவும் முதன்மைப் பிரதிநிதியாகவும் இருந்து வருவதை நிராகரித்து விட்டு தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு எதையும் காண இயலாது என்பதே இன்றைய அரசியல் யதார்த்தமாகும்.

இதுவரை காலமும் புலிகளுடன் பேசுவதற்கு மறுத்து வந்த அரசாங்கம் இப்போது நோர்வே நாட்டின் அனுசரணையுடன் பேச்சுவார்த்தை நடாத்த முன்வந்துள்ளமையும் அதற்குப் புலிகள் இயக்கம் சாதகமான வழிகளில் செயல்பட இணங்கி உள்ளமையும் வரவேற்க வேண்டியதாகும். அதேவேளை பேச்சுவார்த்தை, தீர்வுத்திட்டம், ஒப்பந்தம், தீர்வு நடைமுறைகள் போன்றவற்றின் கடந்த கால்த் தோல்விகளின் கசப்பான அனுபவங்களைத் தகுந்த பாடங்களாகக் கொள்ளுதல் வேண்டும். அதே போன்று இது வரையும் தேசிய இனப் பிரச்சினையைத் தத்தமது உலக பிராந்திய மேலாதிக்க நோக்கங்களுக்காகப் பயன் படுத்திவந்த அந்நிய சக்திகளும் அவர்களது உள்நாட்டு முகவர்களும் இப் பேச்சுவார்த்தையை வெவ்வேறு வழிகளில் திசை திருப்பவும் குழப்பவும் தமது செல்வாக்கை திணிக்கவும் முயல்வார்கள் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் அல்லது அனுசரணை என்பதில் எமது கட்சிக்கு வித்தியாசமான அடிப்படைக் கருத்துநிலையும் நோக்கும் உண்டு.**

மேலும் அவ் அறிக்கையில், சுதந்திரத்திற்குப் பின்னான அரை நூற்றாண்டு காலப்பகுதி தேசிய இனப் பிரச்சினையானது சிக்கலான வழிமுறைகளில் வளர்க்கப்பட்டு வந்துள்ளது. மாறி மாறி ஆட்சிக்கு வந்த ஆளும் வர்க்க சக்திகள் தத்தமது வர்க்க இன ஆளும் தேவைகளுக்காகவும், பௌத்த சிங்கள மேலாண்மை வாதிகளின் விருப்பங்களுக்கு இணங்கவும் வடக்கு கிழக்கு மலையகத் தமிழ் மக்களின் உரிமைகளைப் பறித்தும் புறக்கணித்தும் வந்துள்ளார்கள். பொருளாதார அரசியல் சமூக கல்வி கலாச்சாரத் துறைகள் அனைத்திலும் தமிழ் மக்கள் ஒதுக்கப்பட்டு இரண்டாம் தர நிலைக்குத் தள்ளப்பட்டனர். அதேவேளை தமிழ் மக்கள் அவ்வப்போது முன்வைத்து வந்த நியாயமான உரிமைக் கோரிக்கைகள் யாவும் நிராகரிக்கப்பட்டன. நாட்டின் தமிழ் சிங்கள மக்களை இன மொழி அடிப்படையில் துருவப்படுத்தி வந்த பேரினவாத ஆட்சிகள் இறுதியில் ராணுவ ஒடுக்குமுறையை தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டனர். அதன் காரணமாகத் தமிழ் மக்கள் இறுதியில் ஆயுதம் தாங்கிப் போராடும் நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

இத்தகைய பின் புலத்தின் ஊடாகவே தேசிய இனப்பிரச்சினை என்பது இன்றைய கொடிய யுத்தம் என்னும் நிலைக்கு வளர்ச்சி கண்டது. தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் தேசியவாத அடிப்படையில் பிரதான போராட்ட சக்தியாக இருந்து வருபவர்கள் விடுதலைப் புலிகளாகவே உள்ளனர். புலிகள் இயக்கம் பற்றி பல்வேறு பட்ட விமர்சனங்களும் குற்றச் சாட்டுகளும் முன் வைக்கப்படுகின்றன. ஆனால் தமிழ் மக்கள் இன்று பேரினவாத ராணுவ ஒடுக்கு முறையின் கீழ் அடக்கப்பட்டு வருகிறார்கள்

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் அல்லது அனுசரணை என்பது பற்றி எமது கட்சிக்கு வித்தியாசமான அடிப்படைக் கருத்து நிலையும் நோக்கும் உண்டு. அது நமது நாட்டில் ஏற்கனவே படித்துக் கொண்ட பட்டறிவின் பாற்பட்டதும் உலக நாடுகளில் கிடைத்த அனுபவங்களைக் கொண்டதுமாகும். இருப்பினும் நமது நாட்டின் இன்றைய சூழலில் நோர்வே நாட்டின் மத்தியஸ்தம் அல்லது அனுசரணை என்பது நிராகரிக்கப்பட முடியாத ஒன்றாகி உள்ளது.

ஆதலால் நோர்வே நாட்டின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படும் அரசாங்க - புலிகள் பேச்சுவர்த்தைக்கு சகல தரப்பினரும் தத்தமது குறுகிய அரசியல் லாப நோக்குகளுக்கு அப்பால் நின்று ஆதரவு வழங்கி முழுமை பெறச் செய்தல் வேண்டும். அதன் அடுத்தடுத்த கட்ட வளர்ச்சிக்கு மேலும் சாதகமான பங்களிப்பை வழங்க வேண்டும். இன்றைய இச் சந்தர்ப்பம் கையிழக்கப்படுமானால் முழுநாடும் மக்களும் மேலும் சின்னாபின்னபடுத்தப் பட்டு இதுவரை சந்தித்த இழப்புகளை விடப் பேரழிவுகளைச் சந்திக்க வேண்டிய சூழலே தோன்றும். இதனைச் சகல அரசியல் சக்திகளும் தூர நோக்குடன் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதை எமது கட்சி சுட்டிக் காட்டுகின்றது.

*சி.கா. செந்திவேல்*

## போர் ஒழிவதை விரும்பாதோரின் பட்டியல்

*ஏகாதிபத்தியவாதிகள் –*
*ஏனெனில் போரின்றி உலகைத் தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாது.*

*பிற்போக்கு அரசாங்கங்கள் –*
*ஏனெனில் போரின்றி அவர்களால் அதிகாரத்தில் நிலைக்க முடியாது.*

*ஆயுத வியாபாரிகள் –*
*ஏனெனில் போரின்றி அவர்களால் கொள்ளைலாபம் ஈட்ட முடியாது.*

*தரகர்கள் –*
*ஏனெனில் அவர்களது வயிற்றுப் பிழைப்பு போரின் மீது தங்கியுள்ளது.*

*ராணுவ அதிகாரிகள் –*
*ஏனெனில் அவர்களது செல்வமும் செல்வாக்கும் போரையே நம்பியுள்ளது.*

*போர் வெறியர்கள் –*
*ஏனெனில் அவர்களாற் சமாதானத்தின் காற்றைச் சுவாசித்து உயிர்வாழ முடியாது.*

*பெரும் வியாபாரிகள் –*
*ஏனெனில் தட்டுப்பாடு என்னும் பெயரில் கொள்ளை இலாபம் பெறமுடியாது*

*சமாதானத்திற்கான என். ஜி. ஓக்கள். –*
*ஏனெனில் போர் இல்லாமல் அவர்கட்குச் சமுதாயத்தில் இடமே இல்லை.*

*முக்கியமரன குறிப்பு: இப் பட்டியல் எந்தவிதமான முக்கியத்துவத்தின் வரிசையிலும் வகுக்கப்பட ,வில்லை.*

**குறும்பன்.**

## கடத்தல் பற்றிய ஒரு உரையாடல்

*விமானக் கடத்தற்காரனிடம் பயணி கேட்கிறான் :-*

அதோ அந்த வயோதிபரைப் பார், வீடுசெல்லத் துடிக்கிறார். அதோ அந்தப் பெண்ணைப் பார், அவளுடைய குழந்தை அவளுக்காக் காத்திருக்கிறது. அதோ அந்த இளைஞனைப் பார் நாளை அவன் வேலையில் நிற்க வேண்டும். இந்த விமானத்தை கடத்தி எங்கள் சிறைக் கூடமாக்கியிருக்கிறாயே, இது என்ன நியாயம் ?

*பயணியிடம் விமானக் கடத்தற்காரன் கேட்கிறான் :-*

அதோ என் நண்பனைப் பார், அவன் செல்லத் துடித்த வீடு இடிக்கப்பட்டு விட்டது. அதோ அந்தப் பெண் போராளியைப் பார், அவளுக்காகத் காத்திருந்த குழந்தை குண்டு வீச்சில் இறந்து விட்டது. அதோ அந்த இளம் போராளியைப் பார், அவன் போய்ச் செய்ய எந்த இடத்திலும் வேலை கிடைக்காது.

என் தேசத்தைக் கடத்தி எங்கள் எல்லாரதும் சிறைக் கூடமாக்கியிருக்கிறார்களே, இது என்ன நியாயம் ?

**ஈஸ்வரி**

நன்றி - நூலகத்திட்டம்




# புதிய பூமி

PUTHIYA POOMI

சுற்று 07 மார்ச்/ஏப்ரல் 2000 பக்கம் 8 விலை 10/= சுழற்சி 34


மார்ச் 8 பெண்கள் தினத்தில் யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோரின் பெற்றோர் நடாத்திய மறியல் போராட்டம்



நமது பிள்ளைகளைத் தேடித் தாருங்கள் !



நாட்டின் எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் அங்கே பிரச்சினைகளும் நெருக்கடிகளும் மேலோங்கிக் காணப்படுகின்றன. யுத்தமும் பொருளாதாரச் சுமைகளும் மக்களை இரு தலைக் கொள்ளியாக்கி உள்ளன. வரவு செலவுத் திட்டத்தில் காணப்படும் துண்டு விழும் தொகையும் அதனை ஈடு செய்ய எடுக்கப்படும் நேரடி மறைமுக முயற்சிகளும் பொருளாதார நெருக்கடியைப் பிரதிபலிக்கின்றன. அதேவேளை மண்ணெண்ணை, டீசல், சமயல் வாயு போன்றவற்றின் திடீர் விலை அதிகரிப்பு சகல பொருட்களின் விலைகளையும் அதிகரிக்கச் செய்துள்ளன. இதனால் வாழ்க்கை சுமை மக்கள் மீது தாங்கிக் கொள்ள இயலாதவாறு ஏற்றப்பட்டுள்ளன. அடுத்து மின்சாரம், தொலைபேசி, போக்குவரத்துக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட உள்ளன. சகல நிலைத் தொழிலாளர்கள் ஊழியர்கள் உத்தியோகத்தர்களுக்கு சம்பள உயர்வு எதுவும் வழங்க உத்தேசிக்கப் படவில்லை. பராளுமன்ற, மாகாணசபை உறுப்பினர்களுக்கு மட்டும் சம்பள உயர்வு போதியளவுக்கு உயர்த்தப் பட்டுள்ளது. அவர்களுக்காண வரிச் சலுகைகளும் உறுதிப்படுத்தப் பட்டுள்ளன. அதேபோன்று அந்நிய முதலீட்டாளர்களுக்கும் வரிச் சலுகைகள் தாராளமாக வழங்கப் படுகின்றன. ஆனால் மக்கள் பொருட்கள் சேவைகள் வரி, பாதுகாப்பு வரி என்பனவற்றால் வாட்டி வதைக்கப் படுகின்றனர். மலையகத்தின் பெருந் தோட்டத்துறையில் தொழிலாளர்களின் நாட்சம்பளம் 95 ரூபா மட்டுமே. ஆறுருபா மேலதிகக் கொடுப்பனவு எல்லோருக்கும் எல்லாக் காலங்களிலும் கிடைப்பதில்லை. இந்தவருடம் தை மாதத்தில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் மீளாய்வு செய்யப்பட்டு எதுவும் நடக்கவில்லை. அதுபற்றி மலையக மக்களின் தலைவர்கள் என்போருக்கு எதுவித அக்கறையும் கிடையாது. அவர்களது குறி யாவும் அடுத்த பாராளுமன்றத் தேர்தலிலேயே உள்ளது.

## அரசின் வரவு செலவுத் திட்டம் மக்கள் மீதான சுமைகளே !

அண்மையில் பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டம் பெரும் தடல்புடல் விவாதங்களுக்குப் பின் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இவ்வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவீனம் என்னும் பெயரில் யுத்தத்திற்கே அதிக பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆயுதக் கொள்வனவிற்கும் படைகளின் அன்றாடச் செலவுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள தொகையானது யுத்தம் தொடரும் மிக உக்கிரமாகத் தொடரும் என்பதையே கோடிட்டுக் காட்டியுள்ளது.

எனவே நாட்டு மக்கள் அனைவரும் தமது பொருளாதாரச் சுமைகள் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு அதற்கேற்ற சம்பள உயர்வுகள் போன்ற பொரளாதாரக் கோரிக்கைகளுக்காகப் போராட வேண்டிய நிலைக்கே தள்ளப்பட்டுள்ளனர். சும்மா இருந்தால் எதுவும் கிடைக்கப் போவதில்லை என்ற நிலையில் நியாயமான சம்பள உயர்வுக்கு போராடுவதைத் தவிர பேறு வழியே இல்லை.

❖❖❖

## நீதித்துறை தமிழ் மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் !

செம்மணி கோலை வழக்கை யாழ்ப்பாணத்திலிருந்து மாற்றி தென்னிலங்கையிலுள்ள வேறொரு நீதிமன்றத்துக்கு மாற்றும்படி அவ்வழக்கின் சந்தேகநபர்களின் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு நீதிமன்றத்தில் விசாரிக்கப் படுகின்ற பயங்கரவாத தடைச்சட்ட வழக்குகள் கொழும்புக்கு மாற்றப்படலாம் என்று பத்திரிகைகள் செய்திகளை வெளியிடிருந்தன.

இது இவ்வாறிருக்க பயங்கரவாதத்தடைச் . சட்ட சந்தேகநபர்களுக்கு பிணை வழங்குவதில் சட்டமா அதிபருக்கிருக்கும் அதிகாரத்தை இல்லாமல் செய்யும் திருத்தச் சட்டம் கொண்டுவரப்படவிருப்பதாக செய்திகள் அடிப்பட்டன.

அதேவேளை பயங்கரவாத தடைச்சட்ட வழக்குகளை விரைவாக விசாரித்து முடிக்க நடவடிக்கைகளை எடுப்பதாகவும், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தை திறக்கவும், அநுராதபுரம் நீதிமன்றத்திலிருந்து யாழ் நீதிமன்றத்திற்கு பயங்கரவாதத் தடைச்சட்ட வழங்குகளை மாற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் சட்டமா அதிபர் கமலசபேசன் தெரிவித்திருந்தார். புதிதாக இரண்டு தமிழ் மேல்நீதிமன்ற நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் நியமனம் தமிழ்ப் பிரதேசங்களை மையமாகக் கொண்டதாக இருக்கலாம் என்று எண்ணப்பட்டது.

சில வழக்குகள் தற்போது விசாரிக்கப் படுவதுபோன்று வடக்கு கிழக்கில் விசாரிக்கப்படாது வேறு இடங்களில் விசாரிக்கப்படும்போது சாட்சிகள் தமிழ் பிரதேசங்களிரிருந்து ஏனய இடங்களுக்கு செல்வதில் பிரயாணச் சிரமம் இருக்கிறது.

தங்களுக்கு பரீட்சையில்லாத தென்னிலங்கை நீதிமன்றங்களுக்கு வரும்போது சாட்சிகள் பலவிதமான அழுத்தங்களுக்கும் உட்படுத்தப் படலாம்.

யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருக்கும் போது மக்களுக்கு ஓரளவாவது நம்பிக்கை தரக்கூடிய ஒரே நிறுவனம் நீதித்துறையாகவே இருக்க முடியும். குறிப்பாக பாதுகாப்பு படையினரின் அத்துமீறல்களை கட்டுப்படுத்தும் ஒரு நிறுவனமாக நீதித்துறையே இருக்க முடியும்.

நீதிமன்றங்கள் கட்டளைகளை பிறப்பித்தாலும் அவற்றை மீறுவதற்கு பலவிதமான நியாயங்களை பாதுகாப்பு படையினர் கொண்டிருக்க யுத்த சூழ்நிலை உதவுகிறது. சாதாரதாம்பாள் கொலை வழக்கு நபர்கள் பற்றிய விபரங்கள் நீதிமன்றத்துக்கு தெரிவிக்கப்பட்ட போதும் இன்னும் உரியவர்களை கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. செம்மணி வழக்கில் சில சந்தேக நபர்களையாவது நீதிமன்றத்திற்கு முன்கொண்டுவர அவ்வழக்கை விசாரிக்கும் நீதவான் எடுத்துக் கொண்ட பிரயத்தனங்கள் எல்லோருக்கும் தெரிந்ததே.

பாதுகாப்பு என்ற காரணம் காட்டி தமிழ் பிரதேசங்களில் விசாரிக்கப்படும் வழக்குகள் தென்பகுதி நீதிமன்றங்களுக்கு மாற்றப்படுவது ஏற்றதல்ல. சந்தேக நபர்களான பாதுகாப்பு படையினருக்கு தமிழ்பிரதேசங்களில் பாதுகாப்பு இல்லை என்றால் பயங்கரவாத தடைச்சட்ட சந்தேகநபர்களுக்கும் சிங்களப் பகுதிகளில் பாதுகாப்பு இருக்க முடியாது என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அதேபோன்று வடக்கு கிழக்கை சேர்ந்த தமிழ் சாட்சிகள் தென்னிலங்கைக்கு வந்து சாட்சியளிப்பதில் பல சிரமங்கள் இருக்கின்றன. தென்னிலங்கையில் இருந்து அனுப்பப்படும் நீதிமன்ற அழைப்பாணைகள் தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள சாட்சிகளுக்கு உரிய முறையில் கிடைப்பதில்லை. அதனால் சில சாட்சிகள் நீதி மன்றங்களின் கண்டனங்களுக்குள்ளாகி இருக்கின்றனர்.

தமிழ் பிரதேசங்களில் இயங்கும் நீதிமன்றங்களில் வழக்குகள் விசாரிக்கப்படுவதன் அவசியம் உணரப்பட வேண்டும். தமிழ் சாட்சிகளுக்கு விளங்கக் கூடிய தமிழ் மொழியில் விசாரணைகள் நடப்பதும் அவசியம். சாட்சிகள் பயமில்லாத அச்சுறுத்தப்படாத விதத்தில் சாட்சியங்களை அளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். இவை நீதி நிலைநாட்டப்படுவதற்கான சாதாரண அடிப்படைகளாகும்.

யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டவர்கள் அநுராதபுர நீதவான் மண்தில் ஆஜர்செய்யப்பட்டு பின்னர் களுத்துறையில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் அநுராதபுரத்திலேயே நடத்தப் படும்போது ஏற்படும் சிரமங்கள் ஏராளம். அநுராதபுர நீதவான் கஹட்டகஸ்திகிலிய என்ற இடத்தில் அமர்வுகளை நடத்துவதுண்டு. அவ்வாறான இடங்களுக்கு சந்தேகநபர்களை கொண்டுசென்று கொண்டுவரும்போது அவர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லாமல் இல்லை. சந்தேக நபர்களின் உறவினர்களும் அவ்வாறான இடங்களுக்கு செல்வதில் சிரமமிருக்கிறது.

சட்டமா அதிபருக்கு இருக்கும் பிணை வழங்கும் அதிகாரம் பறிக்கப்பட்டால் 'பயங்கரவாத சந்தேகநபர்களுக்கு' பல தடுப்பு முகாம்கள் ஏற்படுத்த வேண்டிவரும். அதனால் பெரும் எண்ணக்கையினர் பிணையின்றி பாதிக்கப்படுவர்.

எனவே பேரினவாத அடக்கு முறைகளுக்குட்பட்டுள்ள தமிழ் மக்கள் அவர்களின் பிரதேசங்களில் பாரபட்சமற்ற நீதித்துறையின் நிவாரணங்களை பெறுகின்ற உரிமை நிலைநாட்டப்பட வேண்டும்.

♍♍♍

1ம் பக்கத் தொடர்ச்சி

### மலையக மக்களை

வேறு எவ்விதக் கோரிக்கைகளும் வந்துவிடாமல் தடுப்பதற்காக சில முயற்சிகள் மேற் கொள்ளப்படலாம்.

ஆனால் அம்முயற்சி-களிலிருந்து வேறுபட்டு மலையகத் தமிழ் மக்களின் சார்பில் நேர்மையான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு அவற்றை வென்றெடுக்கும் நோக்கில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஏறக்குறைய எல்லா அமைப்புகளினதும் விருப்புடன் பொதுவான கோரிக்கையாக யோசனைகளை முன்வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப படாதபோது இந்த நோக்கம் அடிப்படையாக இருக்க முடியாது. அந்தவகையில் நோக்கும்போது பி.பி. தேவராஜ் எம்பியின் தலைமையிலான குழு பற்றிய சந்தேகங்கள் எழுவது தவிர்க்க முடியாததாகிறது.

எதிர்கால சந்ததியினரின் கேள்விகளில் இருந்து தப்புவதற்காக எடுக்கப்படும் முயற்சிகள் மக்களின் விருப்பு வெறுப்புகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க முடியாது. அரசாங்கத்தின் விருப்புக்கு ஏற்ப செய்யப்படும் முயற்சிகள் துரோகத்தனமான-வையாகும்.

மலையகத் தமிழ் மக்களுக்கென பிரத்தியேகமான அதிகாரப்பரவலாக்கலை கேட்க முடியாது என்றே பி.பி. தேவராஜ் முதல் அனைத்து இ.தொ.கா. தலைவர்களும் ஏற்கனவே கூறிவருகின்றனர். அதேபோன்று சுகததாஸ ஸ்போர்ட்ஸ் ஹோட்டல் கூட்டத்தை ஒழுங்கு செய்தவர்களில் சிலர் பொ.ஜ.ஐ. முன்னணியுடன் நெருங்கியவர்களாக இருக்கிறார்கள் என்பதாலும் பரவலாக எல்லோரையும் அக்கூட்டத்திற்கு அழைக்காதபடியாலும் சந்தேகங்கள் எழுகின்றன.

அந்தக்குழுவினர் அவர்களின் நேர்மையை வெளிப்படுத்துவார்களா ? அல்லது வேறு வேறு கட்சிகளை சேர்ந்தவர்களாக இருந்தபோதும் எதிர்வரும் தேர்தலுக்கு இம்முயற்சியை முதலீடாகக் கொள்ளப்போகின்றனரா ?

தேர்தலுக்கான முதலீடாகவே மேற்படி முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன என்பதனை ஊர்ஜிதம் செய்யும் வகையில் 'தேர்தல் முறை சீர்திருத்தமும் இந்திய வம்சாவளி மக்களும்' என்ற தலைப்பில் மட்டுமே சுகததாஸ ஸ்போட்ஸ் ஹோட்டலில் கூட்டம் நடைபெற்றதாக அறிய முடிகிறது. அக்கூட்டம் 25ம் திகதி நடைபெற்றது. புதிய பூமியுடன் நெருக்கமான ஒருவருக்கு 27 ஆம் திகதி கிடைத்த அழைப்பிதழிலிருந்தே மேற்படி தகவலை தெரிந்து கொள்ளமுடிந்தது.

ஆனால் தேசிய நாளிதழ்களின் செய்திகள் மலையத்தமிழ் மக்களின் இனஉரிமைகள் சம்பந்தமாக யோசனைகளை முன்வைக்கவே குழு நியமிக்கபட்டதாகவே கூறின. இதனை மலையக மக்களை ஏமாற்ற இன்னொரு பம்மாத்து என்று சொல்லாமல் வேறு என்ன வென்று சொல்வது.

1ம் பக்கத் தொடர்ச்சி

### யுத்தத்தை

வருவதாகக் கூறப்படுகிறது. இந் நிலையில் யுத்தத்தைத் தொடர்வதா ? அல்லது விரைந்து சமாதானத்தை அடைவதா? என்பதில் பொதுசன முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒரு முடிவுக்கு வந்தே தீர வேண்டும். இவர்களது முடிவிலேயே நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது. இவர்கள் தாமாக உணர்ந்து தமக்குரிய வர்க்க இன நிலைப்பாடுகளைக் கடந்து நாட்டையும் மக்கள்ளையும் காப்பாற்ற முன்வர மாட்டார்கள். மக்கள்தான் மாபெரும் இயக்கங்களை நடாத்தி சமாதானத்திற்கான நிர்ப்பந்தத்தை ஏற்படுத்த வேண்டும். அதற்கான சூழல் உடனடியாக காணப்படாது விடினும் அதனயே படிப்படியாக முன்னெக்க வேண்டும். இதனை விட வேறு வழியே கிடையாது. இதனை சிங்கள மக்கள்தான் ஆக கூடுதலாக உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

## சம்பள உயர்வு தேவை இல்லையாம் அமைச்சர் ஆறுமுகத்தின் வேண்டுகோள்

தோட்டத்தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வேண்டுமென்று இ.தொ.கா.வோ அதன் தலைவர் ஆறுமுகம் தொண்டமானோ கோரிக்கை விடுக்கப் போவதில்லை என்பது தெளிவாகிறது. குட்டித் தொழிற்சங்கங்கள் சம்பள உயர்வு கேட்பது நியாயமற்றது என்று கூறும் ஆறுமுகம் தொண்டமான் தான் முன்வைக்கும் கோரிக்கை என்னவென்று இதுவரை கூறவில்லை.

இது 105 ரூபா சம்பள உயர்வு போராட்டத்தையே நினைவு படுத்துகிறது. ரூபா 105க்கு குறைவாக வாங்கிக் கொண்டு வேலைக்கு போய்விட வேண்டாம் என்று தொழிலாளர்களை உரத்துச் சாடிய சௌ. தொண்டமான் ஒரு சில நாட்கள் கழித்து 'தோசை கருகிப்போகும்' கதையைச் சொல்லி ரூபா 95 ஐ சம்பளமாக பெற்றுக்கொள்ள தொழிலாளர்களை நிர்ப்பந்தித்தார். அது பாட்டனாரின் நிலைப்பாடு. அதனால் அப்போராட்டம் காட்டிக் கொடுப்புடன் கை விடப்பட்டது. ஆனால் இன்று சம்பள உயர்வே தேவை இல்லை என்பது பேரன் தொண்டமான் நிலைப்பாடாகும். குட்டித் தொழிற்சங்கங்கள் கேட்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கான நாளாந்த சம்பள உயர்வு நியாயமற்றது என்று பெரிய தொழிற்சங்கமான இ.தொ.காவின் தற்போதைய தலைவரும் கால்நடை அபிவிருத்தி, தோட்டப்புற உள்ளகக் கட்டமைப்பு, தோட்டப்புற வீடமைப்புஅமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தெரணியகலை சம்புமல்கந்தை தோட்டத்தில் தொழிலாளர் முன் பேசும்போது தெரிவித்துள்ளார்.

குட்டித் தொழிற்சங்கங்கள் ஒரு நாள் சம்பளமாக ரூபா 200 இலிருந்து 300 வரை கேட்கின்றன என்றும் அக்கோரிக்கை நியாயமற்றது என்றும்அதனால் பொருளாதாரரீதியாக தோட்டங்கள் பாதிக்கப்படும் என்றும் கூறியுள்ளார். தோட்டத் தொழிலாளி ஒருவர் நாளாந்தம் ரூபா 1000/= சம்பளமாக பெற்றாலும் நமக்கு மகிழ்ச்சிதான். அவ்வாறெனில் தோட்டங்கள் லாபத்தில் இயங்காது என்றும் கூறி தோட்டக் கம்பனிகளுக்கு வக்காலத்து வாங்கி உள்ளார் அமைச்சர் ஆறுமுகம். அப்படியாயின் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் இ.தொ.கா. தொழிற்சங்கத்தின் தலைவரா ? அல்லது தோட்ட முதலாளிமார்கள் சங்கத்தின் தலைவரா ? தோட்டத் தொழிலாளர்கள் பதிலைத் தேட வேண்டும்.

வெளியிடுபவர் : இ. தம்பையா இல. 47, 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு யூ. கே. பிரின்டஸ். 26/1இ சிவானந்தா வீதி, கொழும்பு 13.